ஜா ம க் கா ர ன் JAMAKKARAN

# ஜாமக்காரன்
# JAMAKKARAN

VOLUME - 1 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 9
SEPTEMBER 2017 TAMIL & MALAYALAM
ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=

*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*
*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*

✆ 0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



கர்த்தருக்குள் அன்பானவர்களே,

உங்கள் யாவருக்கும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

இந்த மாத ஜாமக்காரன் CSI & CNI சபை விசுவாசிகளுக்காக மட்டும் வெளியிடுகிறேன். ஆகவே மற்ற சபை மக்கள் **ஆவிக்குரிய செய்திகளை** இந்த மாதம் எதிர்பார்க்க வேண்டாம். CSI சபை விசுவாசிகளும் **ஆவிக்குரிய செய்திகளை** இந்த செப்டம்பர் மாதம் ஜாமக்காரனில் **எதிர்பார்க்க வேண்டாம்.**

**இது CSI Special Issue இது CSI விசேஷ பதிப்பு**

உலக வரவாற்றில் கிறிஸ்தவ கத்தோலிக்க சபைகளில் முதல் **சீர்திருத்தம்** (Reformation) 500 ஆண்டுகளுக்கு முன் 1517ம் ஆண்டு அக்டோபர் 31 தேதி பெரும் புரட்சியுடன் நடந்தது. அதற்கு கர்த்தரால் பயன்படுத்தப்பட்ட கருவிதான் **மார்ட்டின் லூத்தர்.** இவர் **ஜெர்மனி** தேசத்தில் **விட்டன்பர்க்** நகரத்தின் All Souls **கத்தோலிக்க சபையில்** 1517ம் ஆண்டு அக்டோபர் 31 தேதி பிரம்மாண்டமான அந்த பேராலய கதவில் கத்தோலிக்க சபை பின்பற்றிய வேத வசனத்துக்கு **புறம்பான,** பிழையான **நம்பிக்கைகள்.** தேவன் விரும்பாத சடங்குகள் ஆகிய இவைகளை எதிர்த்தும் வேதம் எதை **சரியான உபதேசம்** என்று போதிக்கிறதோ அதன் அடிப்படையில் **95 முக்கிய சாராம்சங்கள்** கொண்ட சத்தியத்தை நோட்டீஸ் போல எழுதி அதை ஆலய கதவில் ஆணி அடித்து மக்கள் அனைவரையும் அதை வாசிக்க செய்தார். அவைகளை வாசித்த மக்கள் மனதில் தெளிவு பிறந்தது. கத்தோலிக்க சபைகளுக்கு எதிராக புரட்சி வெடித்தது.

இவைகளை மாரட்டின் லூத்தர் அவர்கள் எழுதுவதற்குமுன் அவர் வேதத்தை படிக்கப்பட்ட பாடு கொஞ்சம்நஞ்சம் அல்ல. அன்றைய கத்தோலிக்க சபைகளில் முழு வேதத்தையும் படிக்க அனுமதி இல்லை. அப்படிப்பட்ட காலகட்டத்தில் மார்ட்டின் லூத்தர் அவர்கள் இரகசியமாக வேதத்தை படித்து தியானித்தபோதுதான், ஆவியானவர் உண்மை சத்தியத்தை இவருக்கு போதிக்க, இவர் உள்ளத்தில் பாரம் கொண்டவராய் தன் பாரம்பரிய **கத்தோலிக்க சபை உபதேசம்** யாவும் வேத வசனத்தக்கு மிகவும் விரோதமானது என்பதை உணர்ந்தார். ஆவியானவர் இவரை தூண்ட ஆரம்பித்தபின்தான் சபையின் தவறான உபதேசங்களை தன் உடன் ஊழியர்களான குருக்களுடன் பகிர்ந்துகொண்டார். உடனே இதை மக்களுக்கு தெரியப்படுத்தவேண்டுமே என்று அங்கலாய்த்தார்.

கத்தோலிக்க சபையின் பிழையான உபதேசங்களில் பிரதானமானது **மரித்தவர்களுக்காக** ஜெபித்தல் என்பது ஆகும். இதன்அடிப்படையில்தான் **போப்** அவர்கள் பாவ மன்னிப்பு சீட்டை விலைக்கு வாங்கும்படி சபைகளை கட்டாயப்படுத்தினார், **செத்துப் போனவர்களின்** பெயரில் பணம் கட்டி **பாவ மன்னிப்பு சீட்டை** விலைக்கு வாங்கினால அந்த செத்துப்போனவர்கள் அவர்கள் எப்பேர்ப்பட்ட பாவம் செய்திருந்தாலும் அவர்களுக்கு **பரலோகம் நிச்சயம** என்று கூறப்பட்டது. இப்படி போப்ஆண்டவரே கூறியதால் மக்கள் அதை கடவுளுடைய கட்டளையாக நம்பி **பணம்** கொடுத்து **பாவமன்னிப்பு சீட்டை** வாங்கினார்கள். இதை வாசிக்கும் நாம் இவர்கள் இப்படி செய்தது எத்தனை முட்டாள்தனம் என்று ஆச்சரியப்படுவோம். வேதம் அறியாத அந்த காலத்தில் **போப்** சொல்வதையெல்லாம் கடவுள் சொன்னதாக மக்கள் நம்பினார்கள். ஆனால் இன்றைய காலத்தில் மறைந்த சகோ. D.G.S. **தினகரன்** அவர்கள் **2000 ரூபாய்** ஒரு பிள்ளையின் பெயரில் இயேசு அழைக்கிறார் ஊழியத்துக்கு கொடுத்தால் 25 வருடம் அவர்களுக்காக ஜெபம் ஏறெடுக்கப்படும் அந்த பிள்ளை ஆசீர்வதிக்கப்படும் என்றார். உடனே அதை நம்பி பிள்ளைகளின் தலைக்கு 2000 ரூபாய் என்று சகோ. தினகரனுக்கு அனுப்ப வேதம் படித்த முட்டாள்கள் இப்போதும் நம் எல்லோருடைய சபைகளிலும் உண்டே! **பிஷப்** முதல் **ஆயர்,** சபை ஜனங்கள். பிரபல **மேடை பிரசங்கிகள்** யாவரும் அவர் சொன்னதை கடவுள் சொன்னதாக நம்பி ஒவ்வொரு வீட்டிலும் 3 பிள்ளை 6 பிள்ளை என்று அவர்கள் பெயரில் 2000ரூபாய் பணம் கட்டி **இளம் பங்காளர்** திட்டத்தில் சேர்ந்தனர். அதற்கான சர்ட்டிபிகேட் வாங்கி பிரேம் போட்டு வீட்டில் தொங்க வைத்துள்ளார்களே! அதையே மகன் **பால் தினகரனும்** பின்பற்றிஅவர் குடும்பம் முழுவதும் இணைந்து இளம்பங்காளர் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தி **மக்களை ஏமாற்றி** பணம் சேர்க்கிறார்களே! அப்படியிருக்க கல்விஅறிவு இல்லாத அந்த காலத்தில் போப் ஆண்டவர் கூறியதை அன்றைய சபை மக்கள் எப்படி நம்பினார்கள் என்பதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லையே!

அன்றைக்கு ஒரு **மார்ட்டின் லூத்தர்** போப்பின் தவறை தைரியமாக சுட்டிக்காட்டினார். இன்று இந்த **பொய் ஊழியர்களுக்கு** ஜால்ரா தட்டும் **பிஷப்மார். ஆயர்கள்** யாவரும் இது தவறு என்று கூற பயப்படுகிறார்களே.

அன்றைக்கு **கத்தோலிக்க சபையில்** செத்துப்போனவர்களை பரிசுத்தவான்களாய் அறிவித்து **மரியாள், அந்தோனியார், அருளப்பர், ராயப்பர் என்று செத்துப்போனவர்களிடம்** பரிந்துரை ஜெபம் செய்வதை இன்றும் தினசரி TVயில் **மாதா தொலைக்காட்சியில் காண்கிறோம்.** செத்துப்போன **மாதாவிடம்** ஜெபம் இவர்கள் ஏறெடுக்கிறார்களே ! அதையெல்லாம் தவறு என்று சுட்டிக்காட்டிதான் அன்று **மார்ட்டின் லூத்தர்** எழுதினார், **பிரசங்கிக்கவும்** செய்தார்.

**நற்கிரியைகளினால்** பாவ மன்னிப்பை பெறலாம் என்ற மற்றொரு தவறையும் கத்தோலிக்கர் நம்பினார்கள் அது தவறான உபதேசங்கள் என்று அறிவித்து பெரும் புரட்சி கத்தோலிக்க சபைகளிலும், நாட்டிலும் உண்டாக என்று மார்ட்டின் லூத்தர் காரணமானார்.

அன்றைய **கிறிஸ்தவ** அரசாங்கமும், **கத்தோலிக்க சபை** குருவானவர்களும் வெகுண்டு **மார்ட்டின் லூத்தரை கொலை செய்ய** முயன்றார்கள். இவர் கூறிய வசன உபதேசத்தை நம்பின உடன் குருவானவர்களான நண்பர்கள் இவரை காப்பாற்றி ஒளித்து வைத்தனர். **லூத்தரின்** இந்த நடவடிக்கை சபை **சீர்திருத்தமாக** வெடித்தது. மக்கள் வசனத்தின்படி ஜீவிக்க ஆசைப்பட்டார்கள். அப்படி வசனத்தை புரிந்துகொண்டவர்கள் எல்லாரும் இணைந்து **கத்தோலிக்க சபையை** விட்டு பிரிந்து ஆரம்பித்ததுதான் **புரோட்டஸ்டன்ட்** சபைகள் என்று அழைக்கப்பட்டது.

நாளடைவில் புரோடஸ்டன்ட் ஐக்கியத்திலிருந்து ஒரு பிரிவினர் பிரிந்து தங்களை **லூத்தரன் சபை** என்றும் **பிரஸ்பிட்டேரின் சபை** என்றும், **கான்கிரிகேஷனலிஸ்ட்ஸ் சபை, மெத்தடிஸ்ட்சபை பாப்திஸ்துசபை** என்று பல பிரிவுகள் (Denomination) உருவாயின. காலம் மாறமாற பலகாலத்துக்கு பிறகு உருவானததான் **பெந்தேகோஸ்தேசபை** ஆகும். மற்ற எல்லா சபை பிரிவினர்களைவிட தங்கள் தனித்தன்மையை உடையவர்கள் என்று காட்ட உருவாக்கிக்கொண்டதுதான் **அன்னியபாஷை** என்ற உளரல். இந்த உளரல் அடையாளங்களிலும் **பல பிரிவுகள்** சிதறல் தேங்காய்கள் போல் வீதி மூன்றாக பல பெயர்களில் **பெந்தேகோஸ்தே சபைகள்** தோன்றலாயிற்று.

## மார்ட்டின் லூத்தர் அவர்களுக்குக்காக தேவனைத் துதிப்போம்

**மார்ட்டின் லூத்தரின்** முயற்சிக்காக நாம் கர்த்தருக்கு நன்றி கூறுவோம். **மார்ட்டின் லூத்தர்** அவர்களை கர்த்தர் எழுப்பாமல்போயிருந்தால் நாம் இன்னும் **விக்கிரக ஆராதனைக் காரர்களாய், செத்துப்போன மரியாளையும்** பேச முடியாத **குழந்தை இயேசுவையும்** தெய்வமாக வணங்கிக்கொண்டிருந்திருப்போம்.

ஆகவே நம்முடைய நன்றியை காட்டும் விதமாக பெந்தேகோஸ்தே சபை உட்பட எல்லா **புரோட்டஸ்டன்ட்** கிறிஸ்துவ சபைகளும் 500 வருடங்களுக்கு முன் சபை **சீர்திருத்த வாதியாக** எழும்பிய **மார்ட்டின்லூத்தர்** அவர்களுக்காக அவரின் முயற்சிகளுக்காக அவர் பட்ட பாடுகளுக்காக நம் தேவனை துதிப்போம். அவ் வைராக்கியத்தை நினைவு கூறுவோம். அவர் **வேத புத்தகத்தின் உண்மையை** உலகத்துக்கு வெளிப்படுத்தியதற்காக தேவனைத் துதிப்போம்.

❒ இந்திய முழுவதிலும் உள்ள CSI & CNI லூத்தரன் சபைகள் வெளியிட்ட வருடாந்திர காலண்டர்கள் டைரிகள் எதிலும் **மார்ட்டின் லூாத்தர்** அவர்களை பற்றியோ, **புராட்டஸ்டன்ட்உருவான** நாட்களை பற்றியோ இவர்கள்யாரும் குறிப்பிடவே இல்லை. மறந்துபோனார்கள் என்று நினைக்கிறேன். சகோ. R. ஸ்டான்லி (BYM) அவர்கள் குறிப்பிட்டதுபோல Back to the Bible **வேதாகமத்துக்கு திரும்புக** என்ற பெயரில் உள்ள இலங்கை வானொலி ஸ்தாபனம் மட்டும் தங்கள் ஸ்தாபனத்துக்கு இட்ட **அந்த பெயருக்கு ஏற்றாற்போல்** சபைசீர்திருத்தவாதியான **மார்ட்டின்லூத்தர்** மூலமாக உருவான **புராட்டஸ்டன்ட்** சபையின் 500வது வருடத்தை நினைவு கூறும் விதத்தில் 2017ம் வருடம் வெளியிட்ட தங்கள் ஸ்தாபன காலண்டரை வெளியிட்டுள்ளது. அதில் Defining Moments of our Faith என்ற தலைப்பில் சிறந்த வாசகங்கள் எழுதி அவர்கள் வெளியிட்டுள்ளார்கள்.

2017 அக்டோபர் 31ம் தேதி **புராட்டஸ்டன்ட் சபை உருவான நாளை** இந்த 500வது வருட தினத்தில் ஜாமக்காரன் வாசகர்களாகிய நீங்களும், நானும் நினைவுகூர்ந்து கர்த்தருக்கு நன்றி கூறுவோம்.

## CSIல் உண்டாக வேண்டிய மறு சீர்திருத்தம்:

**மார்ட்டின்லூத்தர்** மூலமாக **கத்தோலிக்க சபையில்** உருவான புராட்டஸ்டன்ட் சீர்திருத்தம் போலவே இப்போதுள்ள **CSI,CNI & லூத்தரன்** சபைகளிலும் **சபை நிர்வாகத்தில்** மாற்றங்கள் கொண்டுவரவேண்டியது மிக **அவசியமும், அவசரமும்** ஆகும். அவைகள் என்ன மாற்றம் என்பதை இதே ஜாமக்காரனில் என் கட்டுரையின் கடைசியில் குறிப்பிட்டுள்ளேன். இப்போதும் சிலவற்றை குறிப்பிடுகிறேன்.

❒ **CSI சபை நிர்வாகத்தில்** இந்த மாற்றங்கள் உருவாக வேண்டுமானால் **பிஷப்மார், ஆயர்கள்** பணவிஷயத்தில், ஸ்தாபனங்கள், பல்வேறு கல்விசம்பந்தமான **கல்லூரிகள்** அதன் **நிர்வாகம்** எதிலும் **இவர்கள் தலையிட கூடாது. சபைகளின்** ஆவிக்குரிய விஷயத்திலும், **ஊழியத்திலும்** மட்டுமே இவர்கள் கவணம் செலுத்தவேண்டும். இது நடைபெற இப்போதுள்ள ஒன்று இரண்டு பிஷப்மார்கள், ஆயர்கள்தவிர பெரும்பாலான பிஷப்கள் யாரும் சம்மதிக்கமாட்டார்கள் என்பது உறுதி. காரணம் அவர்களுக்கு ஸ்தாபனம் நடத்தும் அதிகாரமும், அசையும், அசையா சொத்துக்கள்மேல் இவர்கள் இந்துமத மடாதிபதிகள்போல் அதிகாரம் செலுத்தும் உரிமை பறிபோய்விடும், பிஷப்மார்களின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டால் சபை மக்கள் தங்களை மதிக்கமாட்டார்கள்,மரியாதை கொடுக்கமாட்டார்கள் சபை மக்கள் தங்களுக்கு மதிப்பு கொடுக்க மாட்டார்கள், மதிக்கவும் மாட்டார்கள் என்ற பயம் இவர்களுக்கு உண்டு. ஆகவே பிஷப்மார்களும், ஆயர்களும் இந்த சீர்திருத்தத்திற்கு ஒத்துழைக்கமாட்டார்கள்.

ஆகவே எல்லாவற்றையும் **புதிதாக** மாற்றும் சக்தியுள்ள திருச்சபையின் தலையான **இயேசுகிறிஸ்துவின்** பாதத்தில் வைத்து சபை மக்களாகிய நாம்தான் விழுந்து ஜெபிக்க வேண்டும்.

❒ **CSIயில் பிஷப், ஆயர்கள்** ஆகியோர் ஸ்தாபன விஷயத்தில், கல்லூரி நிர்வாகத்தில், பணம் கையாளும் விஷயத்தில், சொத்துக்களை பாதுகாக்கும் விஷயத்திலும் தலையிடாமல் போனால் யாரிடத்தில் இந்த பொருப்பை ஒப்புவிப்பது ?

## அப்போஸ்தல உபதேசம்

**அப். 6ம் அதிகாரத்தில்** இதே கேள்வி அன்றைய புதிய ஏற்பாட்டு அரம்பகால சபையில் எழும்பியது. சபை பெருகினது கூடவே பல பிரச்சனைகளும் பெருகியது. இவைகளை **விசாரிக்க** பொருப்பேற்க சபையினர் இயேசுகிறிஸ்துவினால் தெரிந்தெடுக்கப்பட்ட **அப்போஸ்தலர்** 12 பேர்களிடம் கேட்டுக்கொண்டார்.

அப்போது அவர்கள் சொன்ன பதிலும், அறிவித்த வழிகாட்டியும்தான் **இன்றைய சபை** பின்பற்றவேண்டும். **அப்போஸ்தலர்** 12 பேரும் **ஒன்றாக இணைந்து கூறியதாவது.** நாங்கள் **ஆவிக்குரிய ஊழியத்துக்கென்று** கர்த்தரால் அழைக்கப்பட்டவர்கள். இப்படிப்பட்ட

**பொறுப்புகளை** நாங்கள் ஏற்றுக்கொள்ளகூடாது. ஆகவே **சபைக்குள்ளேயே** நல்ல சாட்சியுள்ள **7 பேரை தெரிந்தெடுங்கள்.** அந்த **ஏழுபேரும்** பரிசுத்த ஆவியானவரின் நிறைவு பெற்றவர்களாவும். **ஞானம்** உள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். அவரகள் **விசாரிப்பு** விஷயம், **பண விஷயம்** யாவற்றையும் பொறுப்பேற்க்கட்டும் என்றார்கள். சபை அப்போஸ்தலர்கள் கற்பித்த உபதேசத்தின்படிதான் இன்றைய சபைகள் நடத்தப்படவேண்டும். அப். 2:42ல் கூறியபடிதான் **ஆரம்ப சபை நிர்வாகம்** நடத்தப்பட்டது.

இப்போது நான் சொல்லும் ஆலோசனையின்படியே CSI சபை சினாட்டில் அனேக ஆண்டுகளுக்குமுன் **பல கோடிகள்** செலவழித்து நியமித்த **பால் கமிஷன் பல விதங்களில் விசாரணை நடத்தி எழுதி ஒப்படைத்த பரிந்துரையிலும்** நான் குறிப்பிட்டப்படித்தான் எழுதப்பட்டு CSI சினாட்டிடம் ஒப்படைத்தது, எந்த **மாடரேட்டரும், பிஷப்மாரும்** அதை இஷ்டப்படவில்லை. **கமிஷன் அறிக்கையை** அப்படியே மூடிவைத்து மூலையில் துாக்கி போட்டுவிட்டார்கள்.

வேத வசனப்படியும் **CSI ஏற்பாடு செய்த பால் கமிஷன்** பரிந்துரைபடியும் செயல்படுத்த வேண்டுமானால் **பிஷப், ஆயர்கள்,** சபை மக்களை வழிநடத்தும் **ஊழிய விஷயத்தில்மட்டும்தான்** கவனம் செலுத்தவேண்டும். ஆனால் வசனம் கூறுகிறபடி **சபையில் குற்றம் சாட்டப்படாதவர்கள்** பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டவர்களை தெரிந்தெடுப்பது எப்படி? அவர்களை எங்கே தேடுவது? இப்போதுள்ள CSI சபைகளின் **அஸ்திபார உபதேசமே** சரியில்லையே !

அப். 2:47ன்படி **இரட்சிக்கப்பட்டவர்களைதான்** சபையில் சேர்க்கவேண்டும். அவர்கள்தான் **திருவிருந்துக்கு** தகுதியுள்ளவர்கள என்று வேதத்தில் எழுதியுள்ளது. ஆனால் இப்போதைய நிலை அப்படியில்லையே!. **மனம்திரும்பாதவர்களின்** கூட்டம் CSI,லுாத்தரன் சபைகளில் எண்ணிக்கையில் மிக **அதிகமாக** இருப்பதால் இப்போது இவர்கள் தெரிந்தெடுத்த கமிட்டியில் உள்ளவர்கள் பெரம்பாலனவர்கள் **மதுபான பிரியர்களாக,** சாட்சி இல்லாதவர்களாக, பெண் மோகக்காரர்களாக இருக்கிறார்களே!

# பிஷப் அவர்களின் சாட்சி

சமீபத்தில் ஒரு பிஷப் அவர்களுடன் நான் பேசிக்கொண்டிருக்கும்போது, அவர் வருத்தத்தோடு வெளிப்படையாக கூறியது என்னை ஆச்சரியத்துள்ளாக்கியது. எங்கள் டையோசிஸ்ஸில் **63 ஆயர்கள்** குடிக்காரர்களாக இருக்கிறார்கள். அவர்களைப்பற்றி சபை மக்களிடமிருந்து ஏராளமான புகார்கள் வந்த வண்ணமிருக்கின்றன. **என் நிலையில்** நீங்கள் இருந்து யோசியுங்கள்! இந்த 63 **ஆயர்களையும்** நான் எங்கு **இடமாற்றம்** செய்வது? அவர்கள்மேல் என்ன **நடவடிக்கை** எடுப்பது? என்றார். இது ஒரு டையோசிஸ் பிஷப் கூறிய செய்தி ஆகும். ஆனால் 6 மாநிலத்தில் உள்ள CSI பிஷப்மார்களை கேட்டால், அவர்கள் டையோசிஸ்ஸில் எத்தனை **ஆயர்கள்** குடிபோதையிலும், **பாலுறவு** சம்பந்தப்பட்ட **வழக்குகளில்** அகப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட **ஆயர்களின்** எண்ணிக்கை குறித்து எவ்வளவு என்று அவர்களை கேட்டுப்பாருங்கள். அதைப்பற்றி யோசிக்கவே பயமாயிருக்கிறது!

இப்படிப்பட்ட ஆயர்கள் சபை **அங்கத்தினர்களிடமிருந்துதான்** தெரிந்தெடுக்கப்பட்டவர்கள். CSI, லுாத்தரன் சபை அஸ்திபாரமே சரியில்லையே? சபையில் உள்ள அங்கத்தினர்களே

இரட்சிக்கப்படாதவர்களாக இருக்கிறார்களே? இப்படியிருக்க சபை சொத்துக்கள்,நியமன அதிகாரங்களை யாரிடம் ஒப்புவிப்பது?.

**பிஷப்களின் பண வசூல்**

ஒரு பிஷப் வெளியரங்கமாகவே ஒரு **லிஸ்ட் டைப்** அடித்து தைத்திருக்கிறார். சபை மக்கள் பிஷப்பை தன் வீட்டு **கல்யாணத்தை** நடத்தவேண்டும் என்று விரும்பினால் அதற்கு இத்தனை **ஆயிரம் ரூபாய்,பிஷப் அடக்க** ஆராதனையில் கலந்துகொள்ள **ஒரு ரேட்,வீடு திறப்புவிழா, ஸ்தாபன** திறப்பு விழாவில் பங்கெடுக்க **ஒரு ரேட்** என்று **மளிகை சாமான்** வாங்கும் கடை லிஸ்ட் போல எழுதி வைத்து சில பிஷப்மார் வசூலில் இறங்கியிருக்கிறார்கள். அதோடு பிஷப்பின் காரை ஓட்டிவரும் **டிரைவருக்கும் ஒரு ரேட்** அந்த பிஷப்பை அழைப்பவர்கள் கொடுக்கவேண்டும் என்று நல்ல வருமானத்துக்குள்ள திட்டம் வைத்து திருமண்டலத்தில் செயல்படுவதை கேள்வி படும்போது வெட்கி தலைகுனியவேண்டியுள்ளது. பல சபைகளில் இப்போது ஆயர்களும் பிஷப்பை போலவே லிஸ்ட் தயாரித்து பண வசூலில் இறங்கிவிட்டார்கள். இப்படிப்பட்ட நிலையில் தான் **இன்றைய CSI** சபைகளின் நிலைபாடு இருக்கிறது.

▣ **ஆந்திராவில்** பல டையோசிஸ்யிலிருந்து வரும் செய்திகள்தான் **மிக மோசமானதாக இருக்கிறது.** அங்கு **பண ஊழல், நில அபகரிப்பு** வெற்றிகரமாக நடைபெறுகிறது. இப்படிப்பட்ட செயல்களில் ஒவ்வொரு **பிஷப்மார்களுக்கு** பின்னால் ஊரில் உள்ள சபையில் மிகப்பெரிய பணக்காரர்கள் உண்டு. இவர்கள் **சபையில் உயர்ந்தவர்கள்** மதிக்கப்படுபவர்கள் என்று கூறப்படும் இந்த **நபர்கள்தான்** இத்தனை **ஊழல்கள்** நடப்பதற்கு **காரணர்களாக** இருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது.

▣ CSI சபையில் **டிஸ்ட்ரிக் சேர்மேன்** என்ற பதவி உண்டு. இந்த பதவியில் உள்ள ஆயர் ஒரு பணி **நியமனத்துக்கு** பல லட்சம் **லஞ்ஜம்** கேட்டிருக்கிறார். கேட்ட பணம் கொடுக்கப்பட்டது. ஆனால் அதைவிட அதிக தொகை கொடுத்த நபருக்கு அந்த வேலையை அவர் கொடுத்துவிட்டார். **லஞ்ஜம்** கொடுத்த முதல்நபர் கொடுத்த பணத்தை திரும்ப கேட்க ஆயர் **ஒரு பாதியை** திரும்ப கொடுத்துவிட்டு மீதி லட்சத்தை கொடுக்கவில்லை. அந்த மீதி தொகையும் திரும்ப கேட்டதற்கு **தர முடியாது** என்று பகிரங்கமாகவே கூறிவிட்டார்.

இவர்கள் தொலைபேசியில் ஒருவருக்கொருவர் கோபத்தோடு பேசியதை **பதிவுசெய்து** அதை டையோசிஸ் **பிஷப்** முதல் டையோசிஸ்சில்**உள்ள அனைத்து முக்கியமானவர்களுக்கும்** அனுப்பிவிட்டார். பதவி நியமனத்தில் லஞ்சம் வாங்கியதை ஒத்துக்கொண்டதை பதிவுசெய்யப்பட்டு கையும் களவுமாக பிடிபட்ட அந்த டிஸ்ட்ரிக்ட் **சேர்மேன் பதவியிலுள்ள** ஆயரை **பதவி நீக்கம்** செய்து **நடவடிக்ககை** எடுக்க சபைமக்கள் பிஷப்பிடம் கேட்டார்கள். ஆனால் இதுவரை அவர் மீது **பிஷப்** அவர்கள் எந்த **நடவடிக்கையும்** எடுக்கவில்லை. பல காரணங்களால் நடவடிக்கை எடுக்க பிஷப் தயங்குகிறார். சபை மக்கள் இனி நியாயத்தை தேடி யாரிடம் போவார்கள். இப்படிப்பட்ட **பணி நியமன பொறுப்பிலிருந்து** இப்படிப்பட்ட ஆயர்களை துரத்தவேண்டாமா?

இப்படி பல வித **பாவ காரியங்களில்** அகப்பட்ட **ஆயர்கள்,** சபை **பணத்தையும் மோசடி** செய்து சபையில் உள்ள ஏழைகளிடம் ஒவ்வொரு **சின்ன காரியத்துக்கும்** லஞ்ஜம் வாங்கும் **ஆயர்களும் பிஷப்மார்களும் 6 மாநிலங்களிலும்** உள்ள CSI டையோசிஸ்களில் நிறைந்து

காணப்படுவதால், CSI சபை **தெய்வத்தால் கைவிடப்பட்டநிலையில் CSI**க்கு எதிராக **CBI விசாரனை** என்றும் வருமானவரி துறையினர் விசாரணை என்றும், **நீதிமன்ற** விசாரனை என்றும் அல்லாடிக்கொண்டிருக்கிறது. நாடே பார்த்து சிரிக்கும் அளவு சீர்கெட்டுப்போய்கிடக்கிறது. இவைகளை CSI லூத்தரன் சபைகளிலிருந்து நீக்க **புது சீர்திருத்தம்** கொண்டுவரவேண்டும். மற்றொரு மார்டீன் லூத்தர் CSI & லூத்தரன் சபைக்காக எப்போது எழும்புவார்?.

**தேவன் தம்மை பரியாசம் பண்ணவொட்டார்** என்று வேத வசனம் CSI சபைகளைப் பார்த்து எச்சரிக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் பணி நியமனமும். கல்லூரி நிர்வாகம் செய்வதும் பண விவகாரமும் எதுவும் இனி **ஆயர்கள்** கையிலோ. **பிஷப்மார்** கையிலோ இல்லாமல் **ஓய்வுபெற்ற நீதிபதி ஓய்வுபெற்ற** உயர் பதவியில் மெத்த படித்தவர்கள், **ஓய்வுபெற்ற** கல்லூரி பேராசிரியர்கள் இவர்களில் **உண்மையானவர்களாக** யார் அறியப்படுகிறார்களோ அவர்களை ஒன்று கூட்டி ஒரு குழுவாக உருவாக்க நிர்வாக பொறுப்பு. பணி நியமன பெறுப்பு. **பண பரிவர்த்தனை** அகியவற்றை ஒப்படைத்து பணி **நியமனத்தை** ஒருவராய் முடிவுசெய்யாதபடி **சீனியாரிட்டி** முறையில் **எண் வரிசையில்** நியமனங்களை முடிவுசெய்யவேண்டும். ஏழை. பணக்காரன் என்று பாராதபடி என்ன ஜாதி என்று பாராதபடி வாங்கிய மதிப்பெண் அடிப்படையிலும் அரசாங்க **இட ஒதுக்கீடு** அடிப்படையிலும் கல்லூரியில் இடமும் ஆசிரிய பணியில் கல்லூரி, உயர் நிலைப்பள்ளி, பாலிடெக்னிக். **மெடிக்கல் காலேஜ்** இப்படி பல இடங்களில் ஒழுங்கான பணி நியமனம அட்மிஷன் ஆகியவை நடக்க வழி உண்டாக்கவேண்டும். CSIக்கு சீக்கிரம் **மறுசீரமைப்பு** ஏற்பாடு அவசியம்.

CSI சட்ட திட்டங்களை **மறு சீறாய்வு** செய்து CSI சபைகளுக்கு **புதுவடிவம்** கொடுத்து ஆவிக்குரியகாரியங்களுக்கு முதன்மை ஸ்தானம் கொடுக்க ஏற்பாடு செய்ய **இந்தியா - வெளிநாடு வாழ்** CSI கிறிஸ்தவர்கள் ஆங்காங்கே ஒன்று கூடி - முயற்சி எடுக்கவேண்டும்.

நாம் **சிறுபான்மையினர்** (Minority) என்ற எண்ணத்தால் உண்டாகும் அகம்பாவம், ஆனவம், அதிகாரம் காரணமாக **சட்டம்** நம்மை ஒன்றும் செய்யாது என்று எண்ணி தங்கள் **பதவியின் சக்தி** பெரிது என்ற எண்ணத்தில் **மமதை கொண்டால்** தெய்வ கோபம்பற்றி எரியும். கடவுளாகவே **தான் நேசித்த** சாலமோன் ராஜாவுக்கு எதிராக **போர் செய்ய** இரண்டுமுறை இரண்டு எதிரிகளை கர்த்தரே எழுப்பினார். கர்த்தர் தான் நேசித்த மக்களை **பார்வோன்** கையிலும் **பெலிஸ்தர்** கையிலும் **அம்மோன்** புத்திரர் கையிலும் கர்த்தர்தானே ஒப்படைத்தார் என்று வேதத்தில் வாசிக்கிறோமே ! காரணம் அப்போதாவது மக்களுக்கு புத்திவராதா?தெய்வபயம் வராதா?தேவனை தேடமாட்டார் களா? என்று மிகவும் வேதனையுடன் எதிர்பார்க்கிறார். அதுபோலவே **இன்றைய மத்திய அரசை** ஆளும்கட்சியானது **பயங்கரமானது. கிறிஸ்தவர்களுக்கு** கிறிஸ்தவ **ஸ்தாபனங்களுக்கு சபைகளுக்கு** எதிராக இவர்களை கர்த்தர் **எழும்ப வைத்தால்** என்னவாகும் என்பதை யோசித்து இப்போதே சபை தலைவர்கள், ஆயர்கள் **மனம் திரும்பி** கர்த்தரின் **பாதத்தில் விழுவது** அனைத்து CSI சபைகளுக்கும்,லூத்தரன் சபைகளுக்கும் நல்லது. CSIபோலவே அனைத்து லூத்தரன் சபைகளிலும் ஊழல் பெருகிவிட்டபடியால் தெய்வபயம் அற்றவர்களாய் பெயர் கிறிஸ்தவர்களாய் ஜீவிப்பதால் இந்த கட்டுரையை லூத்தரன் சபைக்கும் சேர்த்து ஆலோசனை கட்டுரையாக எழுதுகிறேன். இம்முறை என் ஆசிரியர் குறிப்பு (Editorial) மிகவும் நீண்டுபோனது.

உங்கள் அனைவருக்காகவும் தொடர்ந்து ஜெபிக்கிறேன்.

- டாக்டர் **புஷ்பராஜ்**

# C.S.I சபைகளுக்கு சம்பவிக்க போகிற ஆபத்து

**மிஷனரிமார்** நமக்கு கட்டித்தந்த **ஆலயம்**, ஆலயத்தை சேர்ந்த **நிலம்** பலவித கல்வி **ஸ்தாபனங்கள், காலேஜ்** இவைகள் யாவும் நம்முடைய சபையில் உள்ள ஏழைகளின் முன்னேற்றத்திற்காக மிஷனரிகள் மிகுந்த பாரத்துடன் ஆலய **சொத்துக்கள்** யாவையும் நம்முடைய CSI உருவான நாட்களுக்கு முன்பே நம் முற்பிதாக்களின் கைகளில் ஒப்புவித்தார்கள். அதன்பின் பல சபைகள் ஒன்றாக இணைந்து Church of South India Trust Association (CSITA) என்ற பெயரில் Section 26th கம்பெனி சட்டம் எண். 1 என்ற **கம்பெனி சட்டப்படி** 1947ம் வருடம் பதிவுசெய்யப்பட்டது. Registration No. 112/1947 ன்படி **சமூக தொண்டுடன், மத சம்பந்தமான** ஏற்பாடுகள் செய்ய தென் இந்தியாவில் உள்ள **6 மாநிலங்களில்** உள்ள பல்வேறு சபைகளை ஒன்றாக இணைத்து CSI சபையை உருவாக்கி செயல்பட்டனர்.

இப்போது அவைகளை CSI Trust என்ற பெயரில் நாம் உபயோகித்துக் கொண்டு இருக்கிறோம். அதை சட்டத்துக்கு புறம்பான முறையில் நாம் உபயோகித்துக் கொண்டிருக்கிறோம். Trust என்ற பெயரில் உள்ள **கட்டிடங்களை** அதை சார்ந்த நிலங்களை நாம் **உபயோகிக்கலாம், அனுபவிக்கலாம்,** நமக்கு அந்த உரிமை உண்டு, ஆனால் **அதை விற்க சட்டப்படி நமக்கு அனுமதி இல்லை.** சட்டத்துக்கு எதிரானபடி பல ஊழல்கள் நம் CSIயில் நடைபெற்றதை கண்டுபிடித்துவிட்டனர். பல இடங்களில் நிலங்கள் விற்கப்பட்டதை அரசாங்கத்துக்கும் நீதி துறைக்கும் அறிவிக்கப்பட்டது.

தென் இந்தியாவில் உள்ள பல CSI டையோசிஸ்களில் சபைகளில் உள்ள சில **சுயநலவாதிகள்** CSI ஸ்தாபனங்களில் **பண ஊழல்கள்** நடத்தியும் யாருடைய அனுமதியும் இல்லாமல் **அரசாங்க சட்டத்திற்கு** புறம்பாக CSIக்கு சொந்தமான இடங்களை இரகசியாக விற்றதினால் தென் இந்தியாவில் உள்ளபல CSI டையோசிஸ்களுக்கு எதிராக **நீதிமன்றங்களில்** பல வழக்குகள் நடந்துகொண்டிருக்கின்றன.

CSI சபைகளில் நம்முடைய பிரதிகளாக நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட DC **மெம்பர்களும், ஆயர்களும்** சில **நல்ல பிஷப்மார்களும்** இவைகளை விசாரித்து **ஆரம்பத்திலேயே தடுக்காமல்** போனதாலும், சில இடங்களில் **லே செக்ரட்டரிகளும்,** சில **பிஷப்மார்களும்** இப்படிப்பட்ட பண ஊழல் செயல்களுக்கு **உடந்தையாகிபோனதால்** இப்போது **மத்திய அரசாங்கமும் நீதிமன்றங்களும் CSI க்கு எதிராக** நடவடிக்கைகள் எடுக்க ஆரம்பித்துவிட்டார்கள். இந்த ஊழல் விவரங்களை மத்திய அரசாங்க **வருமானவரி துரையினர்** கண்டுபிடித்துவிட்டார்கள். இப்போது நடவடிக்கையும் எடுக்க தொடங்கிவிட்டனர்.

வெளிநாடுகளிலிருந்து நம் CSIக்கு **பண உதவி** செய்யும் **ஸ்தாபனங்களும்** நம் CSI யில் நடக்கும் **பணஊழல்களையும்** சபைசொத்துக்கள் **விற்பதையும் அறிந்துக் கொண்டார்கள்.** அவர்களும் இது விஷயமாக மத்திய அரசாங்கத்தின் உதவியை நாடியுள்ளார்கள். கீழே வாசிக்கபோகும் **ஆங்கில பத்திரிகை** செய்திகளை நீங்கள் வாசிக்கும்போதே **நீதிமன்றமே** CSI Trustக்கு எதிராக **நடவடிக்கை எடுக்க தொடங்கிவிட்டது** என்பதை நீங்கள் உணருவீர்கள்.

இந்த சூழல்களில் **இப்போதுள்ள பிஷப்மார்களும்** ஓய்வுபெற்ற **பிஷப்மார்களும்** CSI டையோசிஸ் சபைகளை நிர்வாகிக்கும் **CSI சினாட்** ஆகியவற்றில் பதவிவகித்த பல பழைய **நிர்வாகிகளும், பொறுப்பாளர்களும்** இதில் அகப்படுவார்கள் என்பது உறுதி. நடக்கபோகும் இந்த அவமானங்களிலிருந்து நம்முடைய CSI சபைகள் காப்பாற்றப்பட இந்தியாவிலும் வெளிநாட்டிலும் உள்ள **CSI அங்கத்தினர்கள்** அனைவரும் இணைந்து **உபவாச ஜெப கூட்டம்** நடத்தவேண்டும். **நீதிமன்ற தீர்ப்பு** CSIக்கு எதிராக வந்தால் CSI சபை உருவான 50 வருடத்திற்கு முன்பு பல சபைகளாக பல பெயர்களில் ஆராதித்ததுபோல CMS, LMS, ஆங்கிலிக்கன் என்று தனித்தனியாக பிரிந்துப்போக வழி உண்டாகும். சபைகளின் அங்கத்தினர்களும் **பழைய பெயரிலேயே** சபை ஆராதிக்க ஆசைபடுவார்கள். CSI சபைகள் துண்டுதுண்டாக கண்ணாடிபோல உடைந்துபோகும் நிலை உண்டாகும். அவற்றில் முதலில் **பிரிந்து போகப்போவது** சரித்திர பிரசித்திபெற்ற **CSI திருநெல்வேலி டையோசிஸ்ஸாகத்தான் இருக்கும்** என்று சிலரால் யூகிக்கப்படுகிறது. காரணம், அது மற்ற CSI டையோசிஸ்ஸைவிட தனி அமைப்பை உடையதாகும்.

அதுமட்டுமல்ல இணைந்த CSI சபைகள் பழைய பெயர்களில் பிரிந்துபோய் ஆராதித்தாலும் **நீதிமன்ற தீர்ப்பு** மூலம் CSIக்கு ஒப்படைத்த அவர்களின் ஆரம்ப கால **சொத்துக்களுக்காகவும், நிலத்துக்காகவும், வங்கிசேமிப்பு பணத்துக்காகவும்** காலமெல்லாம் CSI டையோசிஸ்களுக்கும் CSI சினாட்டுக்கும் எதிராக அந்தந்த சபையினர் **நீதிமன்றம்தேடி** போகவேண்டிவரும்

## **CSI TA Trust** என்றால் என்ன?

சென்னையை தலைமையிடமாக்கி **கம்பெனி சட்டப்படியும்** சட்ட எண்.26ன்படியும் நடந்துக்கொண்டிருக்கும் **CSI டிரஸ்ட் அசோசியேசன்** என்ற நம் CSI என்ற **தர்ம ஸ்தாபனத்தி**ற்கு இந்தியாவிலும், இலங்கையிலுள்ள CSIக்கு சொந்தமான அனைத்து பள்ளிகள்,கல்லூரிகள்,மருத்துவமனைகள், பாலிடெக்னிக், இஞ்ஜினீரிங் கல்லூரிகள் போன்ற அநேக ஸ்தாபனங்களை உண்டு. இவைகளை நம்முடைய **CSI டிரஸ்ட் அசோசியேசன்தான் ஆண்டு** நடத்தி வருகிறது.

மனித நேயத்தோடும், ஆத்ம பாரத்தோடும் அன்று **ஆங்கிலிக்கன்** சபை ஸ்தாபன மிஷனரிகள் நம் சபை மக்களுக்காகவும், நம் சபையில் உள்ள ஏழை பிள்ளைகளுக்காகவும், நாட்டில் உள்ள மற்ற ஏழை மக்களுக்காகவும் அந்த சொத்துக்களை நம்மிடம் ஒப்புவித்து சென்றனர். நம்முடைய CSI ஸ்தாபனங்கள் மூலமாக நம் CSIக்கு **ஏராளமான பணம்** கிடைக்கிறது. தென் இந்தியாவில் உள்ள நம் CSIல் **40 லட்சம்** அங்கத்தினரும் மொத்தம் 23 CSI டையோசிஸ்களுக்கும் 46000 கிராமங்களிலும் சபைகளிலும் அசையும்-அசையா சொத்துக்கள் நமக்கு உண்டு. அவைகளிலிருந்து கிடைக்கும் பெரும் தொகையான **காணிக்கைகளையும், சொத்துக்கள்** மூலம் கிடைக்கும் **வாடகை** போன்ற **மற்ற வருமானங்களையும்** நம் CSI சபைகள இப்போது நிர்வகித்தும் **அனுபவித்தும்** வருகிறது.

இப்போதுள்ள கணக்குப்படி ஒவ்வொரு வருடமும் CSI சபைகள் மூலமாக **1300 கோடி வருமானம்** கிடைக்கிறது என்று ஒரு செய்தி அறிக்கை அறிவிக்கிறது.

ஆனால் CSI யின் வருட **வருமான கணக்கை** பரிசோதனை செய்தபோது மிகப்பெரிய அளவில் **வருமானத்தை குறைத்து காட்டி** பெரும் **பண ஊழல்** நடந்துள்ளது. இதுவரை வருமான கணக்கை வருமானவரி துறையிடம் தவறாக காண்பித்து வந்ததை **விசாரனை கமிட்டி** கண்டுபிடித்துவிட்டது. அரசாங்க **கம்பெனி விவகார நிர்வாக** கமிட்டி 2016 அக்டோபரிலேயே இந்த **பண திருட்டையும், சொத்து ஊழலையும்**பற்றி விசாரனை நடத்த Serious Fund Investigation Office ஏற்பாடு செய்துவிட்டது. இவைகளைக்குறித்து 2016 ஜூலை மாதமே The Economic Times என்ற ஆங்கில பத்திரிகை இந்த **பெரும் பண ஊழல்** விவரத்தை கண்டுபிடித்து பத்திரிகையில் எழுதி வெளிப்படுத்தியது.

இப்போது இந்த CSIயில் கிடைக்கும் பணம், வருமானம் மற்றும் அதன் சொத்துக்களை குறித்த விசாரனை நடந்துகொண்டிருக்கும்போதே Mr. John Durai என்ற நபர் இப்போதுள்ள CSI Trust Associationல் அனைத்து பொருப்பில் உள்ளவர்களையும் **நீக்கினால்தான்** விசாரணை நியாயமாக நடத்த முடியும் என்று Mr. John Durai அவர்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார்.

இப்படிப்பட்ட வழக்கு CSI க்கு எதிராக நீங்கள் தொடுக்க காரணம் என்ன என்று கேட்டதற்கு அவர் கூறிய பதிலாவது: இப்போது நடைமுறையில் இருக்கும் CSI நிர்வாக மேனேஜ்மென்ட், **கம்பெனி சட்டத்திற்கு** விரோதமாக CSI சினாட் இந்த முறை தவறிய ஏற்பாட்டையும் ஊழலையும் செய்ததால் நான் CSI டிரஸ்டுக்கு எதிராக இந்த வழக்கை தொடுத்தேன். ஆகவே பழைய CSI பொருப்பாளர்கள் **மேனேஜ்மென்ட் நிர்வாகத்தில்** இருந்தால் அவர்கள் உண்மையை **மறைத்து விடுவார்கள்.** ஆகவே பழைய **நிர்வாகிகளை நீக்க வேண்டும்** என்றேன் என்றார்.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன் CSI பிரச்சனைகளை குறித்து **கம்பெனி விவகார டிரிப்யூனல் நீதிபதி திரு.முகம்மது ஷரீப் தாரீக்** என்பவர் எழுதிய தீர்ப்பு மிக முக்கியமாக கவனிக்கபட வேண்டியதாகிறது.

இந்த சூழ்நிலையில இப்போதுள்ள CSI Trust நியமன முறையில் நிர்வாகிகளை நியமித்துள்ளார்களா? என்பதில் விசேஷ கவனம் செலுத்தவேண்டியது மிகவும் அவசியம். ஆகவேதான் இப்போதுள்ள எல்லா CSI Trust தலைமையிலுள்ளவர்களையும், அலுவலகத்தில் வேலை செய்யும் **அலுவலக ஊழியர்களையும்கூட** நீக்கிவிட்டு அந்த ஸ்தானத்தில் ஓய்வுபெற்ற **நீதிபதி சம்பத்** அவர்களை நியமித்துள்ளது.

அடுத்த சில மாற்று ஏற்பாடும் தீர்ப்பும் வரும் வரை இப்போதுள்ள CSI Trust நிர்வாக பொருப்பை **நீதிபதி சம்பத்** அவர்களே ஏற்றெடுத்து நடத்துவார்.

அதோடு இப்போதுள்ள CSI நிர்வாக கமிட்டி தங்கள் கைவசம் உள்ள எல்லா **கணக்கு வரவு- செலவு** விவரங்களையும், அது சம்பந்தமான தஸ்தாவேஜுகளையும் அது வைக்கப்படும் அலுவலக அறைகளையும் நீதிபதி அவர்களிடம் கூடிய சீக்கிரம் ஒப்படைக்க வேண்டும். அந்த கணக்கு வரவு செலவு விவரங்கள் அடங்கிய அறைகளை முடிவு தீர்ப்பு வரும் வரை **சீல்** வைத்து பாதுகாக்கவேண்டும் என்பதுதான் தீர்ப்பின் விவரமாகும்.

இப்போது நீங்கள் தமிழில் வாசித்த விவரங்களை ஆங்கிலத்தில் அப்படியே வெளியிடுகிறேன். வெளிநாட்டில் வாழும் சபை விசுவாசிகள் பலருக்கு தமிழ் அல்லது மலையாளம் வாசிக்க தெரியாது. ஆகவே செய்திதாளில் கண்ட ஆங்கில செய்திகளை அப்படியே வெளியிடுகிறேன்.

**இனி ஆங்கில தினசரி பத்திரிகையில் வந்த செய்தியை வாசியுங்கள்.**

# Company Law Tribunal Dismantles Top Order at Church of South India; Appoints Retired Judge

Bharani Vaitheesvaran@timesgroup.com

The National Company Law Tribunal has removed all the directors and office bearers managing the country's largest protestant group – The Church of South India – and installed retired Judge K.Sampath in an interim order dismantling the power structure in a church administration ridden with alleged charges of misappropriation.

The church is already working to contest the order. Further proceedings in the case begin early next month. The Church of South India Trust Association, a Chennai – head quartered charity organization registered as a section 25 company, runs schools, hospitals and earns predominantly through rental income from lands left behind by Anglican philanthropists. It has been facing charges of alleged fraud and misappropriation of funds for about a decade now. The trust, garnering total revenue of nearly Rs.1,300 crore every year, runs 23 dioceses across 16,000 villages and claims a membership of well over 4 million people.

The Ministry of Corporate affairs had in October engaged the serious fraud investigation office to probe into alleged balance sheet irregularities. ET had first reported about the SFIO beginning its probe in July 2016. Even as the investigation picked up peace, a company petition was filled by church member John S Durai, seeking to remove all the directors of the trust. The petition claimed their election by the church governing council, the Synod, had made rule violations. A counter was filled by the church challenging the grounds made in the company application some time back.

In a revised order two days back accessed by ET, Mohd Sharif Tariq, Member Judicial at the corporate court, said: "Since the company petition is held maintainable in the given circumstances, there is an urgent need to regulate the affairs of the R1 company (Church of South India Trust Association). Thus I proceed to remove all the directors and managing committee including office bearers…" The court has appointed retired Madras High Court Judge K.Sampath as chairman, who will recommend to the court on directors and office bearers.

"The erstwhile management committee is directed to hand over all the documents and books of accounts and other records of the R1 company to the Registry of this bench is a sealed cover within a week from the date of pronouncement of this order." Read the order.

## மேலே வாசித்த ஆங்கில பத்திரிகை செய்தியின் மொழிபெயர்ப்பு

**கம்பெனி விவகார டிரிப்யூனல்** இப்போது CSI தலைமையில் உள்ள **தலைமை நிர்வாகிகளை** நீதிமன்றம் மூலம் நீக்கிவிட்டு CSI டையோசிஸ் **நிர்வாக ஏற்பாடுகளை** ஒழுங்கான முறையில் நடத்த **ஓய்வுபெற்ற நீதிபதி** ஒருவரை நீதிமன்றமே நியமித்திருக்கிறது. CSI சினாட் நிர்வாகிகளையும், டையோசிஸ் நிர்வாகிகளையும் ஆளுமை செய்பவர்களையும் **மேலான்மை** அதிகாரிகளையும் **அலுவலக ஊழியர்களையும்** நீக்க உத்தரவிட்டுள்ளனர். இந்தியாவில் உள்ள புரோடஸ்டன்ட் சபைகளிலேயே மிகப்பெரிய **சபை ஸ்தாபனமான** CSIயில் உள்ள CSIயின் **தலைமை ஸ்தாபனத்தில்** இருக்கும் எல்லோரையும் **கம்பெனி விவகார டிரிப்யூனல்** நீக்கிவிட்டு அவர்களுக்கு பதில் CSI கீழுள்ள முழு நிர்வாகத்தையும **கம்பெனி விவகார டிரிப்யூனலே** ஏற்று நடத்த ஓய்வுபெற்ற **நீதிபதி** திரு. **கே. சம்பத்** அவர்களை நீதிமன்றம் நியமித்திருக்கிறது.

இது CSI நிர்வாகத்தை பிரச்சனையில்லாமல் நடத்த மிக உதவியாக இருக்கும் என்று தீர்மானித்திருக்கிறார்கள்.

CSIயில் நடந்த ஏராளமான **பண ஊழல்களை** ஏற்கனவே அரசாங்க வருமான வரித்துறை விசாரிக்க தொடங்கிகொண்டிருக்கும்போதே **நீதிமன்றம்** தலையிட்டு மேலே கூறிய அவசர நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

கடந்த அனேக வருடங்களாகவே டிரிப்யூனலுடைய ஆலோசனையின்படிதான் CSI சபை நிர்வாகம் நடந்து வருகிறது. இத்தனை பிரச்சனைகள் நடந்தும் CSIயில் உள்ள **ஆயர்களும்** பலர் DC மெம்பர்களும் சபை மக்களில் பெரும்பலோர்களும் இப்பிரச்சனை குறித்து அறியாமலேயே CSI சபையில் ஆராதித்துகொண்டிருக்கிறார்கள். இப்போதுள்ள CSI சினாட் நிர்வாகிகளும், CSI டையோசிஸ் பிஷப்மார்களும், CSI மக்கள் யாருக்கும் இதை அறிவிக்காமல் இரகசியமாகவே இப்பிரச்சனைகளை கையாண்டுகொண்டிருக்கிறார்கள்.

இது சம்பந்தமான வழக்கு அடுத்த மாதம் நடக்கும் (இதை நான் எழுதும்போது அந்த வழக்கு நடந்திருக்கும் என்று நம்புகிறேன்.)

## CSI யின் மூன்று பிஷப்களின் பெயரிலும் அவர்களுடன் 9 நபர்களின் பெயரிலும் CBCID வழக்கு பதிவு செய்துள்ளது.

CB-CID Registers case against 19, including three Bishops

**- Hindu 13-5-2015**



**Rt. Rev. Devakadasham**



**Most Rev. Thomas K. Oomman**



**Rt. Rev. Timothy Ravinder**

இந்தியாவில் **தமிழ்நாட்டில் உள்ள ஊட்டி மலை** பிரதேசத்தில் CSI **கோயமுத்தூர் டையோசிஸ்** நடத்தும் **Ketti இஞ்ஜினீரிங் காலேஜில்** 2012 மே 1 முதல் ஏப்ரல் 30 வரை நடந்த **7.9 கோடி** ரூபாய் பண ஊழல் காரணமாக மூன்று பிஷப்புகள் பெயரிலும் 19 நபர்கள் பேரிலும் CBCID **நீலகிரி யூனிட்** வழக்கு பதிவு செய்திருக்கிறது.

**மெட்ராஸ் உயர்நீதிமன்றம்** கொடுத்த தீர்ப்பின் அடிப்படையில் **டைரக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் CBCID** (சென்னை)க்கு **நீதிமன்றம்** கொடுத்த கட்டளையின்படி இந்த **வழக்குப்பதிவு** செய்யப்பட்டது. வழக்கில் பதிவு செய்யப்பட்ட FIR கூறுவதாவது **Ketti இஞ்ஜினீரிங் கல்லூரியில்** மொத்தம் 5 வித ஊழல்கள் நடந்ததாக அதில் எழுதப்பட்டுள்ளது.

இதைப்பற்றிய விஷயத்தில் வழக்குதொடுத்த Mr.பிரேம்குமார் அவர்கள் கூறுவதாவது **Ketti இஞ்ஜீனிரிங்** கட்டிடபணி விஷயத்தில் **4.81 கோடி** ரூபாய் **பண ஊழல்பற்றியும்** கோயமுத்தூர் CSI டையோசிஸ்ஸின் **ஆடிட்டர் ரிப்போர்ட்டில் காண்பிக்காமல் மறைத்த 1.97 கோடி ரூபாய்** குறித்தும் அதோடு கூட வேறு ஏராளமான ஊழல்களும் மற்ற சில பண ஊழல்களும் கோயமுத்தூர் CSI டையோசிஸ் பல்வேறு இடங்களில் நடந்திருக்கிறதாக அந்த அறிக்கை செய்திகள் கூறுகிறது.

CSIல் முன்பு மாடரேட்டராக பணியாற்றியவரும், இப்போது **கன்னியாகுமரி** CSI டையயோசிஸின் **பிஷப் Rt. Rev. தேவகடாட்சம்** அவர்களும் இப்போது பதவியிலுள்ள புதிய CSI **மாடரேட்டரும்** மத்திய கேரளா CSI டையோசிஸ் பிஷப்புமான **Most Rev.Thomas K. Ooman** அவர்களும் **கோயமுத்தூர் CSI டையோசஸ்** பிஷப் **Rt. Rev. திமோதேய் ரவீந்தர்** அவர்களுமான 3 பிஷப்கள் தான் வழக்கில் முதல் பிரதிகளாக சேர்க்கப்பட்டுள்ளார்கள்.




மீதியுள்ளவர்களான Ketti இன்ஜினீரிங் கல்லூரி **பிரின்சிபால்** அவர்களும் கோயமுத்தூர CSI டையோசிஸ் நிர்வாக கமிட்டியிலுள்ள 14 நபர்களுடன், டையோசிஸ் சொத்துக்களை நிர்வகிக்கும் அதிகாரி (Property Officer) ஆகியவர்களையும் சேர்த்து FIRல் பதிவுசெய்துள்ளார்கள்.

இது சம்பந்தமான வழக்கின் ரிக்கார்டுகளை பரிசோதனை செய்து முடித்தபின் உடனே தாமதிக்காமல் இவர்கள் பெயரில் **விசாரனை** நடத்தப்படும் என்று CBCID அறிவித்துள்ளது.

(பத்திரிக்கை செய்தி பழையதானாலும் வாசகர் அறிவதற்காக அதை இங்கு வெளியிடுகிறேன்.)

## CSI சரித்திரம்

நீங்கள் கீழே வாசிக்கபோகும் CSI பற்றிய சரித்திர விவரங்களை எழுதியது Dr. George Philip (கோட்டயம்) அவர்களாகும். இவர் Central Kerala CSI டையோசிஸ்ஸில் உள்ள **கீழ்வாய்ப்பூர்** என்ற ஊரிலுள்ள CSI சபையின் அங்கத்தினராகும். மேலும் இவர் கேரளாவில் பிரசித்ததிபெற்ற **CMS கல்லூரியின்** சரித்திரபாட **பேராசிரியரும்** கல்லூரியின் உதவி **பிரின்சிபாலாகவும்** பணி ஆற்றி ஓய்வு பெற்றவராகும்.

CNI & CSI சபைகளைக்குறித்தும் அதன் வரலாறு குறித்தும் இன்று நிறைய CSI அங்கத்தினருக்கு தெரியவில்லை. குறிப்பாக **வெளிநாட்டில்** வாழும் CSI அங்கத்தினர்கள் பலருக்கும் CSI சரித்திரம் தெரியவில்லை. தான் அங்கம் வகிக்கும் **சபையை** பற்றியும் அதன் **வரலாறு** பற்றியும் CSI சபையினர் எல்லாரும் அறிந்திருக்க வேண்டும். நம் சந்ததியினரும் அறிந்திருக்க வேண்டும் என்பதற்காகவே டாக்டர் ஜார்ஜ் பிலிப் அவர்களை CSI சபை சரித்திரங்களையும் அது சம்பந்தமான மற்ற விவரங்களை குறித்தும் எழுதும்படி கேட்டுக்கொண்டேன்.

ஆங்கிலத்தில் அவர் எழுதியதை இப்போது இதை தமிழில் மொழிபெயர்க்க நேரம் இல்லாததால் அவர் எழுதியதை அப்படியே வெளியிடுகிறேன். வரும் மாதங்களில் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுவேன். இத்துடன் வழக்குகளின் நீதிமன்ற **தீர்ப்பு நகல்களையும்** அப்படியே ஆங்கிலத்தில் வெளியிடுகிறேன்.

இனி நீங்கள் வாசிக்க தொடங்கலாம்.

**Dr. George Philip**
(Former Vice Principal and H o D of History)
C M S College, Kottayam.
E mail-robinambat@gmail.com

The Church of South India (C. S. I.) is the second largest Christian Church in India based on the population of members, next to the Roman Catholic Church, and also the largest Protestant denomination in the country. The Church of South India (CSI) is the successor of a number of Protestant denominations in India, including the Church of England, the Methodist Church and the Church of Scotland after Indian Independence. It came into being by a union of Anglican and Protestant churches in South India The Church of South India came into existence on 27 September 1947, a month after India achieved its independence from England.

The signatories of the Union decided to form a Trust to hold the properties of the church. Church of South India Trust Association was constituted as a legal holding body of the movable and immovable properties of the Church of South India. The CSI-TA was registered in September, 1947 under Section 26 of the Indian Companies Act 1913 (now Section 25 of the Indian Companies Act 1956) as a Religious and Charitable Company which has no business character and with no profit motive. The properties of the Churches in Union have been transferred to CSI-TA. The main objectives of the Trust are:

- To act as Trustees for the CSI and accordingly to acquire and hold immovable and movable properties for the purpose of the Trust within the territory of India.
- To aid and further the work of CSI and in particular to assist pecuniarily and otherwise all or any of the Societies, Schools, Colleges, Hospitals, Institutions and other Charities which exist in connection with the said Church.
- To act as Trustees for the maintenance of the Church, Bishops, and other workers of the Church.

. The Trust has its own bye- laws called Memorandum of Association (MoA) and Articles of Association (AoA). In 2013 another act passed by the Indian Parliament (Indian Companies Act 2013). Under this Act CSITA is a Section 8 Charity Company. The MoA Clause 4 bars all those receives salary from the Company from sitting in the Management Board.(Copy attached). The clergies and the Bishops are the servants of the company and hence they cannot sit in the Management Board. To overcome this hurdle they inserted a new paragraph in AoA (Refer AoA clause 4. 2nd paragraph). The bye law cannot be changed without the prior permission of Government of India.(Please refer page No. 32 0f 45 , 11th para). Hence the above said amendment is invalid.

It was said when the trust was registered in 1947 we have an asset worth 25 lakhs crores. But in present valuation it come only 18 lakhs Crores. Where is 7 lakh crore?. Here comes to light the corruption of the Clergy and Bishop dominated management Board. The 45 page Roc's (Register of Companies) report clearly highlights the volume of corruption, favoritism and mismanagement of the finances of the company. The Serious Fraud Investigation Office (SFIO) under the Ministry of Corporate Affairs also initiated its investigation into the affairs of CSITA Company.

Protest movements started in different dioceses. Under the leadership of Dr. John S Dorai the movement gained momentum. He started his crusade in 2006. In January 2016 he filed a Company petition in NCLT (National Company Tribunal) Chennai Bench against the corrupt management board. The NCLT passed an order in 18/11/2016. It removed all the corrupt Directors and put the company under a Receiver. (See the order of NCLT- Para 18). The removed Directors approached the High Court of Madras and obtained a stay on 28/11/2016 under Article 226 and 227 of the Indian Constitution. While passing the stay order the court said it is subject to the condition that the stay petitioner shall not assign, alienate or encumber any of the properties of the company in any manner until further orders. When the interim stay vacates the order of the NCLT will prevail.

**In the name of our Jesus Christ we have to unite to protect the wealth of CSI.** As a stakeholder we have every right to protect our CSI and CSITA from the corrupt people. Come forward and protect our properties. For any clarification kindly contact through E- mail.

(l) To sell, mortgage, charge lease, dispose of, exchange and otherwise deal with any property of or held by the Association in any manner authorised by law with such consent (if any) as may be by law required and in accordance with such rules and regulations as may from time to time be laid down by the Synod of the Church of South India.

(m) To hand over to any corporation, persons or association of persons, property vested in the Association either for its general purposes or on special trusts which permit of such handing over, if in the opinion of the Association, it will benefit any objects of the Association or of any such special trust as aforesaid.

(n) In case for any part of the said area a separate Association shall at any time be formed for the purpose of holding property in that part of the said area to transfer and vest in such separate Association any property relating to trusts administered in that part of the said area as may be considered suitable.

(o) Until the inauguration of the Church of South India to act as aforesaid for the Church of India, Burma and Ceylon, the South India United Church and the South India province of the Methodist Church and the Missionary Societies connected therewith in the said area.

(p) To pay out of the funds of the Association or out of any particular part of such funds all expenses of, or incidental to the formation and management of the Association of administering any special trust or otherwise carrying out any of the foregoing objects, including the payment of salaries to persons employed.

(q) To do all such other lawful acts and things as are incidental or conducive to the attainment of the above objects.

4. The income and property of the Association whencesoever derived shall be applied solely towards the promotion of the objects and purposes of the Association as set forth in this Memorandum and no portion thereof shall be paid or transferred directly or indirectly by way of dividend, bonus or otherwise howsoever by way of profit to the members of the Association provided that nothing herein contained shall prevent the payment in good faith of out-of-pocket expenses or of remuneration to any officers or servants of the Association or to any member thereof or other person in return for services rendered to the Association or to any of the objects for which the Association is established. Provided further that no member of the Council of management or of the governing body of the Association shall be

/True copy/

(S. R. MAHADEVAN)
DEPUTY DIRECTOR OF INCOME-TAX
(EXEMPTIONS)-I, CHENNAI-34.

appointed to any salaried office or to any office of the Association paid by fees, and that no remuneration shall be given by the Association to any member of such Council or governing body except repayment of out-of-pocket expenses and interest on money lent or rent for premises demised to the Association.

5. The fourth paragraph of this Memorandum is a condition on which a licence is granted by the Goverment of the Association in pursuance of section 26 of the Indian Companies Act, 1913.

6. The liability of the members is limited but if any member of the Association receives any dividend, bonus or other profit in contravention of paragraph 4 of this Memorandum his liability shall be unlimited.

7. Every member of the Association undertakes to contribute to the assets of the Association in the event of the same being wound up during the time that he is a member, or within one year afterwards, for payment of the debts and liabilities of the Association contracted before the time at which he ceases to be a member, and of the costs, charges, and expenses of winding up the same, and for the adjustment of the rights of the contributories among themselves provided that such amout does not exceed Rs. 15 or in the case of his liability becoming unlimited such amount as may be required in pursuance of the last preceding paragraph.

8. If, upon the winding up or dissolution of the Association there shall remain any surplus after the satisfaction of all its debts and liabilities, the same shall not be paid to or distributed among the members of the Association but shall be given or transferred to or applied to some other institution or institutions, having objects similar to the objects of the Association or to some one or more of the charitable objects of the Association to be determined by a majority of the members of the Association, voting at a meeting duly convened at or before the time of dissolution and therafter approved by the Synod of the Church of South India, or in default thereof by such Judge of the High Court of Madras or such other Court as may have or acquire jurisdiction in the matter.

9. True accounts shall be kept of the sums of money received and expended by the Association, and the manner in respect of which such receipt and expenditure take place and of the property credits and liabilities of the Association and, subject to any reasonable restrictions as to the time and manner of inspecting the same that may be imposed in accordance with the regulations for the time being of the Association these accounts shall be open to the inspection of the members. Once at least in every year the accounts of the Association shall be examined and the correctness of the balance sheet ascertained by one or more properly qualified auditor or auditors.

( S. R. MAHADEVAN )
DEPUTY DIRECTOR OF INCOME TAX
(EXEMPTIONS)-I, CHENNAI-34.

# THE INDIAN COMPANIES ACT, 1913

---

## ARTICLES OF ASSOCIATION
## OF
## THE CHURCH OF SOUTH INDIA TRUST ASSOCIATION

---

1. For the purpose of registration the number of members is declared not to exceed fifteen. The committee of management may register an increase of members whenever they consider it desirable.

2. These articles shall be construed with reference to the provisions of the Indian Companies Act, 1913, and terms used in these articles shall have the same respective meanings as they have when used in that Act.

3. The Association is established for the purposes expressed in the Memorandum of Association. The expression 'The Church of South India (hereinafter referred to as 'the Church') as used in the Memorandum and in all or any Articles of Association or other regulation of the Association for the time being in force shall be deemed to mean and include the Madras, Dornakal, Tinnevelly and Travancore and Cochin Dioceses of the Church of India, Burma and Ceylon, the South India United Church and the South India Province of the Methodist Church uniting to form the Church of South India and the Church of South India after inauguration.

### MEMBERSHIP

4. The first members of the Association shall be :

1. The Venerable Archdeacon J. White,
2. Mr. L. D. Miller,
3. Mr. C. L. Lucas,
4. Rev. L. J. Thomas,
5. Mr. P. K. Monsingh,
6. Rev. A. M. Payler,
7. Rev. T. R. Foulger,
8. The Venerable Archdeacon P. C. Kora,
9. The Venerable Archdeacon E. M. Spear,
10. Mr. M. G. Jesubatham,
11. Rev. S. J. Savarirayan,
12. Rev. B. C. D. Mather,
13. Rev. V. J. Chelliah,
14. Rev. P. Gurushantha,
15. Rev. F. Whittaker,

who shall remain members until replaced by members elected by the Synod of the Church and thereafter members shall be such persons as shall be elected as members by the Synod of the Church The Moderator, Deputy Moderator, General Secretary and the Treasurer of the Synod of the Church shall be ex-officio members.

The Moderator of the Synod of the Church of South India, Ex-officio is also the Ex-officio Chairman of the Association, the General Secretary of the Synod of the Church of South India, Ex-officio is also

( S. R. MAHADEVAN )
DEPUTY DIRECTOR OF INCOME-TAX
(EXEMPTIONS)-I, CHENNAI-34.

the Ex-officio Secretary of the Association and the Treasurer of the Synod, Church of South India, Ex-officio is also the Ex-officio Treasurer of the Association.

5. One third of the members shall retire at each meeting of the Synod of the Church but shall be eligible for re-election. The one-third to retire shall be those who have been members longest since last elected as members. The Synod shall decide at its first meeting the order of retirement of the members elected at that Meeting. A member otherwise shall cease to be a member of the Association.

(a) in the case of first members until replaced by members elected by the Synod of the Church ;

(b) on his retirement to be signified in writing ;

(c) on his absence from India for a period of twelve consecutive months.

## COMMITTEE OF MANAGEMENT

6. The business and affairs of the Association shall be managed by a committee of management (hereinafter called the Committee) which shall be not less than five and not more than ten in number until otherwise determined by a general meeting and who shall be elected annually by the Association in General Meeting. The first seven members named as the first members of the Association in Articles 4 shall be the first members of the Committee and they shall continue in office until the first general meeting of the Association.

7. From and after the first general meeting of the Association the Committee shall consist of ex-officio and members elected by the Association from amongst its members at its ordinary meeting in each year. Members shall retire from office each year at the ordinary meeting of the Association, but a retiring member shall be eligible for re-election.

8. If any members of the Committee shall become insolvent or take the benefit of any act for the relief of insolvent debtors or become of unsound mind or cease to reside in the area for a period of more than twelve consecutive months or shall signify in writing to the Chairman or the Committee his desire to retire or he is absent for three consecutive meeting of the committee or from all meetings of the Committee for a continuous period of three months whichever is the longer without leave of absence from the Committee he shall as from the happening of any of such events cease to be a member of the Committee.

9. Any casual vacancy occurring among the members of the Committee may (but shall not neecessarily) be filled up by the

( S. R. MAHADEVAN )
DEPUTY DIRECTOR OF INCOME-TAX
(EXEMPTIONS)-I. CHENNAI-34.

furnished. The accounts of the 22 Dioceses needs to be scrutinised to find out whether the consolidated cash flow statement is in order. The final conclusion could be drawn only on verifying the consolidated Income and Expenditure Account, and the Balance Sheet of the company in comparing with the accounts of the 22 dioceses.

**11. ELECTION OF OFFICE BEARERS**

Who are all the office bearers of the company and what is their tenure? On what Criteria they have been elected and selected?

**REPLY OF THE COMPANY:-**

The Most Rev.Dr.G.Dyvasirvadam, Chairman, CSITA/ Moderator, CSI, The Rt.Rev. Thomas K.Oommen, Deputy Moderator,CSI, Rev.Dr.D.R.Sadananda, Hon. Secretary, CSITA & Gen. Secretary, CSI and Adv. C.Robert Bruce, Hon. Treasurer, CSITA & CSI.

They are elected as per clause 4 of the Articles of Association of the company. Please refer Memorandum of Articles of Association is enclosed herewith as Annexure 10.

**COMMENTS OF THE REGISTRAR OF COMPANIES:**

It is observed by the Inspecting Officer during inspection of the company that no resolution was passed for amendment of clause 4 of the Articles of Association. In this regard, this office has sought clarification. The company has not given proper reply. The company has not passed any Special resolution for amendment to clause 4 of the AOA. This clause has been included in the Articles of Association by the resolution passed at EGM held on 5.3.2002 and without approval of Central Government as provided under Regulation 13 of the Companies Regulation, 1956. Hence, the company had violated the provisions of Section 25 read with 31 of the Companies Act, 1956. As per Regulation 13 of the Companies Act, 1956, the license shall be in the form specified in Annexure III or IV as the case may be, or in a form as near thereto as circumstances admit. In clause (7) of Annexure-III, provides that "no alteration shall be made to the Memorandum of Association or to the Articles of Association of the company, which are for time being in force, unless the alteration has been previously submitted to and approved by the Central Government. If the company did not comply with the said provisions, the License of the company shall be revoked in accordance with the provisions of Section 25(8) of the Companies Act, 1956. Now, the powers of revoking license vested with The Regional Director. Since, the company did not pass any special resolution to amend the clause in AOA and also did not obtain prior permission of Central Government, amendment of clause 4 of the AOA is invalid, and in view of the invalidity of the clause of AOA, the election of Office bearers on the basis of said clause of AOA needs further scrutiny of books, papers, records of company is required by way of investigation.

12. **CSITA COMMITTEE**

Is there any committee called CSITA Committee, if so furnish the roles/powers of the said committee.

**REPLY OF THE COMPANY:-**

There is a committee called CSITA Management Committee, which is

17. In the light of the above discussion, I hold that under the attending circumstances, the company petition cannot be dismissed at the threshold because it requires a detailed enquiry into the matter complained of and thus in exercise of the powers conferred under proviso to Section 244 of the Companies Act, 2013, I waive all the requirements of Section 244(1)(b) of the Companies Act, 2013 by treating the Company Petition under Order 1, Rule 8 of the Civil Procedure Code, as a representative petition r/w Section 241 of the Act, 2013 for the purpose of proceeding to enquire into the matter complained of. Thus, the Company petition is held maintainable. Any of the observations made above shall have no bearing on the merits of the case.

18. Since the Company Petition is held maintainable and in the given circumstances there is an urgent need to regulate the affairs of R1 Company. Thus, I proceed to remove all the directors and managing committee including office bearers by appointing Hon'ble Justice Shri ~~C.T. Selvam~~ K Sampath (Retd) as the Chairman who is authorised to nominate four suitable persons to be chosen from the sub-units/Dioceses of Churches and three office bearers. The Chairman will recommend the names of the persons to this Tribunal for appointment as Director and as office bearers respectively. The remunerations of Directors and office bearers shall be fixed by the Chairman. However, such names shall neither be chosen from the group of petitioner nor from the respondents, but they must be independent persons to be chosen from the sub-units/Dioceses of Churches. The Chairman shall be entitled to monthly remuneration to be fixed by him that may commensurate to his status and R1 Company shall pay the same to him. The erstwhile management committee is

## ஜாமக்காரனின் குறிப்பு

நீங்கள் இதுவரை வாசித்த CSI பற்றிய **பண ஊழல், சொத்து ஊழல் நீதிமன்ற விசாரனை** விவரங்களை இப்போது நான் வெளியரங்கமாக வெளியிடுகிறதினால் நம் CSIயிலுள்ள ஒரு சில **பிஷப்மார்கள்** சில CSI **ஆயர்கள்** CSI DC **மெம்பர்கள்** என்னை முன்பைவிட கூடுதலாக வெறுப்பார்கள் என்பதை நான் அறிவேன். அதன் காரணமான CSI சபையில் என் பிரசங்க கூட்டங்களுக்கான **வாசல்களும்** இனி வரும் காலங்களில் மூடப்படலாம்.

CSI சபையில் பிறந்து வளர்ந்த நான் CSIல் இருக்கும்போதுதான் இரட்சிக்கப்பட்ட அனுபவத்தை பெற்றேன். இப்போதும் என்னை வளர்த்துகொண்டிருக்கும் CSI சபைகள், CSI சினாட் இவைகளுக்கு கெட்ட பெயரும் **அவமானமும்** வந்துவிடக்கூடாதே என்பதற்காகவும், **இனி வரும் நாட்களிலாவது** CSI சபை சொத்துக்கள் காணிக்கைகள் CSI யின் பொருப்பாளர்களாக உள்ளவர்களோ, இனி பொருப்பாளர்களாக வரபோகிறவர்களோ நம் CSI சபை மக்களின் காணிக்கைகளை சபை நிலங்களை **கொள்ளையடித்துவிடக்கூடாது** என்பதற்காகத்தான் இத்தனை **நஷ்டங்களையும்** பிஷப்மாரின் **வெறுப்புகளையும்** நான் தாங்கிக்கொள்கிறேன். நான் நேசிக்கும் CSI சபை அனைத்து அங்கத்தினர்களும் இனியாவது சபை கணக்கு விவரங்களை. சபை சொத்துக்களை கவனமாக பாதுகாத்து இனிவரும் சந்ததிகளுக்காக அவைகளை காப்பாற்றி வைத்து உதவ வேண்டும் என்ற உண்மையான எண்ணத்தில் பாரத்தில் நான் இதை வெளியிடுகிறேன்.

நான் CSI சபையின் **எதிரி அல்ல.** என் தகப்பனார் 30 வருடங்கள் CSI சபையின் செயலாளராக பொறுப்பு வகித்தவராகும். **CSI சபையும், வானொலி பிரசங்கமும்** தான் என்னை உலக பிரசங்கியாராக அறிமுகப்படுத்தியது. அதன்பின்தான் பல்வேறு வித்தியாசமான உபதேசங்களை கொண்ட பல்வேறு பெயர்களிலுள்ள சபைகளில் நான் பிரசங்கித்தேன். வசன ஆலோசனைகளை கொடுப்பதற்காகவும், வேதபாடம் நடத்துவதற்காகவும் வித்தியாசமான உபதேசங்களை உபதேசிக்கும் மற்ற சபைகள் மத்தியிலும் கர்த்தர் என்னை உபயோகித்தார். என்னை உயர்த்தினார். **உலகத்தின் 164 தேசங்களில்** பிரசங்கித்த என்னை அந்தந்த நாடுகளில் உள்ள வேதாகம கல்லூரிகளில் பேராசிரியராக பணிபுரிந்த மெத்த படித்தவர்கள், பெரிய பிரசித்திபெற்ற பிரசங்கிகளுக்கும், வேதாகம பண்டிதர்களுக்கும் முன்னிலையில் கர்த்தர் என்னை மிகவும் உயர்த்தினார்.

நான் CSI அங்கத்தினனாக இருந்தாலும் **வேதவசனப்படி மட்டுமே** என் சொந்த கிறிஸ்தவ வாழ்க்கையையும், என் குடும்பத்தையும் நடத்தி செல்கிறேன். என்னை CSI சபையை விட்டு விலகி தங்கள் சபைகளில் என்னை சேர சொல்லி கட்டாயப்படுத்தியவர்களும் உண்டு.

இத்தனை பெரிய ஊழல் நிறைந்த **செத்த சபை** என்று கூறப்படும் CSI சபையில் சிறந்த வேத பண்டிதரான நீங்கள் எப்படி இந்த சபைக்குள் இருக்கிறீர்கள்? எப்படி உங்களால் CSI க்குள் தொடர்ந்து இருக்க முடிகிறது? உங்களுடைய சிறந்த வசன உபதேசம் ஆலோசனைகள் மற்றவர்களுக்கு தானா? உங்களுக்கு இல்லையா?. என்று என்னை கேலி பேசியவர்கள் ஏராளம். நான் அவர்கள் கூறுவதை கவனிக்காமல் அவர்களை அலட்சியபடுத்தனேன். என் மன பாரமெல்லாம் CSI சபைகள் சரியான வசன அடிப்படையில் வளர வேண்டும். சபை மக்கள் **இரட்சிப்பின்** அனுபவம் பெற்று கர்த்தரின் வருகைக்கு CSI சபை மக்களை ஆயத்தப்படுத்த வேண்டுமானால் நான் CSI சபையிலதான் இருந்தாக வேண்டும்.

என் கண்முன்னே CSI அழிந்து சோரம் போவதை என்னால் தாங்கிக்கொள்ள முடியாததால்தான் இப்படி CSI சபைக்குள் உள்ள பல ஊழல் இரகசியங்களை வெளியிடுகிறேன். முதலில் **கர்த்தருக்கும்** அவரின் வசனத்துக்கும், அதன்பின் **CSI சபைக்கும்** நான் **நன்றி** உள்ளவனாக இருக்கவேண்டும். ஆகவே பல பண **நஷ்டங்கள் அவமானங்கள்** பயங்கர கொலை முயற்சி பலமுறை நடந்தபோதும் கர்த்தர் எனக்கு அரணாக இருந்து பாதுகாத்தார். கர்த்தருக்கே

துதி,மகிமை உண்டாவதாக. எதிர்ப்புகள் **கொலை மிரட்டல்கள்** யாவையும் தேவ கிருபையால் சகித்து, தாங்க CSI சபைக்குள் இருந்துகொண்டு ஊழியம் செய்கிறேன்.

நான் நேசிக்கும் **CSI சபையே என்னை வெளியேற்றும் நாள் வரும்.** அதுவரை நான் என் CSI சபைகளுக்கு செய்யவேண்டிய ஆவிக்குரிய உதவிகளை எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி என் மரணம்வரை அல்லது கர்த்தரின் வருகைவரை **ஜாமக்காரன்** மூலமாகவும் என் பிரசங்கம் மூலமாகவும், **அறிவிக்கும்வேலையும், எச்சரிக்கும வேலையையும்** நிச்சயம் தொடர்ந்து நிறைவேற்றுவேன். என் கர்த்தர் என்னோடு இருக்கிறார். அவர் பரிசுத்த ஆவியானவர் மூலமாகத்தான் என்னை இயக்குகிறார், என்னை வழி நடத்துகிறார் என்பதை அறிவேன்.

## ஜாமக்காரன் முடிவுரை:

நான் CSI சபைகளில் நடக்கும் ஊழல்களை வெளியிட்டதைப்போலவே CSI ன்மேல் பாரம் உள்ளவர்களும் CSI ஊழல்களை வெளியரங்கமாக்குபவரகளையும் ஆங்காங்கே **பல டையோசிஸ்சில்** கர்த்தர் ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிறார்.

**சென்னை.** வெல்லூர் கோயமுத்தூர், கோட்டயம், திருவெல்லா, ஆந்திரா, கர்நாடகா போன்ற பல இடங்களில் உள்ள இவர்கள் CSIஐ குறித்த விவரங்களை வெளியிட்டும் CSI சபை மக்களுக்கு விழிப்புணர்வு உண்டாக்குகிறார்கள். மேலும் இவர்கள் நீதிமன்றத்தில் வழக்காடும் **வக்கில்களுக்காகவும்,** மற்ற **செலவுக்காகவும்** தங்களுடைய **சொந்த செலவில்** பணம் செலவழித்து CSI யின் உண்மை நிலையை வெளியே கொண்டு வந்தனர்.

CSI சட்ட **திருத்த மசோதாவை** எதிர்த்து CSI சினாட் பழைய **மாடரேட்டரை** எதிர்த்தும் **சுப்ரீம் கோர்ட் வரை** இவர்கள் சென்று வாதாடினர். அதில் ஒருவர் தன் வீட்டை அடமானம் வைத்து பணத்தொகையை செலவழித்துள்ளார். 00 மாடரேட்டரையும் சட்ட திருத்தத்தையும் எதிர்த்து சுப்ரீம் கோர்ட் சென்று வாதாடிய ஒருவர் கூலி படை மூலம் தாக்கப்பட்டார். இப்படி பலர் தியாகம் செய்துள்ளனர். இவர்களை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.

இவர்கள் யாரும் CSI யில் தங்களுக்கு **பதவி** வேண்டும் என்றோ! நீதிமன்றம் சென்றது தங்களது **சுய விளம்பரத்துக்காகவோ** அல்ல என்பதை நீங்கள் அறியவேண்டும். நீங்களே யோசித்து பாருங்கள் கடந்த வருடம் **CSI சட்ட திருத்த மசோதாவுக்கு** எதிராக எத்தனைபேர் **டெல்லிக்கும் ஹைதராபாத் நீதிமன்றங்களுக்கும்** டெல்லியிலிருந்து தங்கள் சொந்த ஊருக்கு போய் வரவும் **பல லட்சங்கள்** செலவழித்து போய் வந்தார்கள் உங்களில் யாருக்காவது இப்படி கஷ்டப்பட்டவர்களைப்பற்றி தெரியுமா? அவர்களுடைய பெயர் முதலாய் இதுவரை வெளிவரவில்லை. நம்முடைய மூதாதையர் காலத்திலிருந்து ஆராதித்து வந்த **CSI சபைகளும்** சபையின் **சொத்துக்களும்** கொஞ்ச கொஞ்சமாக விற்று காசு பார்க்கும் **CSIயில் உள்ள** துரோகிகளை டையோசிஸ் பணத்தை சூரையாடும் **தெய்வபயம் அற்றவர்களை** CSI டையோசிஸ் பணத்தில் விலை உயர்ந்த கார்களை வாங்கி ராஜாக்களைப்போல சுகம் அனுபவவிப்பவர்களை சபை மக்கள் இனம் கண்டு அனைத்து CSI சபை மக்களும் ஒன்றாக இணைந்து இப்படிபட்ட பிழையான தலைவர்களின் கையிலிருந்து சபைகளை, **நிலங்களை,கட்டிடங்களை** காப்பாற்ற முன்வர வேண்டும். ஒரு **விழிப்புணர்வு** நமக்கு வேண்டும் என்பதற்காக மட்டுமே இவர்கள் எல்லாரும் போராடுகிறார்கள். இவர்களுக்காக இவர்களின் **பாதுகாப்புக்காக** குறைந்தபட்சம் உங்கள் ஜெபத்தில் அவர்களை நினையுங்கள்.

❒ ஒரு **செத்த சபைக்காக** ஏன் இப்படி அவமானப்பட வேண்டும் என்று என் காதுகள் கேட்க பேசியவர்கள் உண்டு. **அவள் தன்னால் இயன்றதை செய்தாள்** என்று இயேசு புகழந்தாரே ! அதுபோல் இவர்களும் **நானும்** ஒரு நாள் இதே வார்த்தைகளால் கர்த்தரால் அழைக்கப்படுவோம். அந்த சமயம் இப்படித்தான் எங்களையும் கர்த்தர் புகழ்வார். அந்த மனதிருப்தி எங்களுக்கு போதும். கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக.

# கேள்வி ? - பதில் !

**கேள்வி :-** கோழி முதலில் வந்ததா? முட்டை முதலில் வந்ததா?

**பதில் :-** இதற்கு விஞ்ஞானிகள் யாராலும் பதில் கூற முடியாது. ஆனால் நம் கிறிஸ்தவ வேதம் பதில் கூறுகிறது.

முதலாவது (கோழிபோன்ற) சிறகுள்ள **சகல வித பட்சிகளையும் கர்த்தர் சிருஷ்டித்தார்.** ஆதி. 1:21. கடவுளுடைய முதல் சிருஷ்டிப்பே **கோழி** என்றால் முதலில் வந்தது எது? மேலே கூறப்பட்ட சிருஷ்டிப்பை நம்புகிறவர்கள் விஞ்ஞானத்தின்படி எதையும் சிந்திக்க வழியில்லை.

விஞ்ஞானப்படி சிந்தித்தால் குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான் என்று விஞ்ஞானம் கூறுகிறது. குரங்கிலிருந்து **குரங்கு குட்டி வந்ததா?** அப்படியானால் அந்த குரங்கு குட்டி வளர்ந்து **ஆண்** குரங்கையோ, **பெண்** குரங்கையோ எங்கே? எப்படி? தேடி கண்டுபிடிக்கும். யோசிக்க யோசிக்க தலையை பிய்த்ததுக்கொள்வீர்கள். ஜாக்கிறதை. அறிவு பெருத்தவன் நோவு பெருத்தவன் என்று சாலமோன் ஞானி கூறுகிறார்.

**கேள்வி :-** கைகளை உயர்த்தி பாடுகிறார்கள், கைகளை உயர்த்தி ஸ்தோத்திரம், அல்லேலூயா என்று சத்தமாக கூறச் சொல்கிறார்கள். இப்படித்தான் ஆலயத்திலும் TVநிகழ்ச்சிகளிலும் காண்கிறோம். ஆனால் டாக்டர் புஷ்பராஜ் ஆகிய நீங்கள் உங்கள் கூட்டங்களில் மக்களை பாட வைக்கும்போது **கைகளை உயர்த்த** சொல்வதில்லையே ஏன்? **கைகளை உயர்த்துவது** பாவமா?

**பதில் :-** பாவமில்லை, பழைய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களான பழைய ஏற்பாட்டு **பெந்தேகோஸ்தே** சபையினருக்கு பொதுவாக **கரிஸ்மேட்டிக்** என்ற உணர்ச்சி வசப்பட்ட கூட்டம் நடத்துபவர்களுக்கும் **கை உயர்த்தி** பாடுவது கைகளை உயர்த்தி அல்லேலுயா ஆமென் சொல்வது வழக்கமாகிவிட்டது.

இது ஒரு அலை (WAVE) ஆகும். ஒரு காலத்தில் ஆராதனை ! ஆராதனை ! என்ற வார்த்தை இல்லாத பாடலையே பாடுவதில்லை. இவர்கள் எல்லாரும் வாயில் **வடை சுடுபவர்கள்.** வாயில்தான் **ஆராதனை.** ஆனால் **இதயமோ** கர்த்தரைவிட்டு தூரத்தில் போய் உள்ளது. இந்த அலையும் ஒருநாள் ஓயும். **அக்கினி**! **அக்கினி**! **அபிஷேகம** ! **அபிஷேகம** ! என்றார்கள், அது வரவர அதுவும் குறைந்துவிட்டது. அதுபோல இவைகளெல்லாம் காலாகாலத்தில் தோன்றும் - மறையும். இவை எல்லாம் **அமெரிக்க இறக்குமதி** சரக்குகள் ஆகும். நம் ஆட்களுக்கு இது தோன்றாது. காப்பி அடித்தே பழகிவிட்டார்கள். **வேதம்** உங்கள் **இருதயத்தை உயர்த்துங்கள்** என்று கூறுகிறது. அப்போஸ்தல நடபடிக்கையில்தான் **சபைகளின் சட்டம்** அடங்கியுள்ளது, சபைகளின் மாதிரி

அதில் எழுதியுள்ளது. இயேசுவின் அப்போஸ்தலர்களும் ஆராதனை நடத்தினார்கள். புதிய ஏற்பாட்டு சபைகளிலும் ஆராதனை நடத்தினார்கள். ஆனால் இப்படி கைகளை உயர்த்தி ஆராதித்ததை எங்காவது வாசித்திருக்கிறீர்களா? கைகளை உயர்த்தி ஆராதிப்பது இப்போதுள்ள அனைத்து கூட்டங்களிலும் சபைகளிலும் வழக்கமாகிவிட்டது. டாடா காண்பிப்பது போல் ஜனங்களை **கைகளை** ஆட்ட சொல்வதும் அதை **புகைப்படம்** எடுப்பதும் இப்போதைய வழக்கம். இன்று இதுதான் டிரண்ட் !



**புருஷர்கள்** தங்கள் கைகளை உயர்த்தி ஜெபிக்க ஒரே ஒரு இடத்தில் மட்டும் வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஜெப நேரங்களில் கைகளை தட்டி** ஜெபிப்பது இப்போது பழக்கமாகிவிட்டது இது எவ்வளவு பெரிய அபத்தம்,! அதுபோலதான் கைகளை உயர்த்தி ஜெபிப்பதும்!

இதை வாசிக்கும் நீங்களே உங்கள் தனிப்பட்ட ஜெபத்தில் அல்லது ஆராதனை நேர ஜெபத்தில் **உங்கள் கைகளை கூப்பி** ஜெபித்து பாருங்கள். **கைகளை** வானத்துக்கு நேராக **உயர்த்தி ஜெபிப்பதற்கும்** நமக்குள் வாசம் செய்யும் (யோவான் 14:24) தேவனை **இருகைகளையும் கூப்பி** கண்களை மூடி ஜெபிப்பதற்கும் உள்ள வித்தியாசத்தை பாருங்கள். நிச்சயம் பெரிய வித்தியாசத்தை நீங்கள் உணர முடியும். அப்படியே **முழங்கால்** பிரச்சனை இல்லாதவர்கள் வலி இல்லாதவர்கள் **முழங்கால்படியிட்டு கைகூப்பி** ஜெபித்துப்பாருங்கள், **வித்தியாசம்** நிச்சயமாக தெரியும்.

**யூத** கலாசாரத்திலே, **ரோமர்களின்** கலாச்சாரத்தில் **அடிமைகள்** எஜமான் முன்பாக **நின்றுகொண்டு** பேசக்கூடாது. **முழங்கால்படியிட்டு** எஜமானிடம் பேசுவார்கள்.

நம் தேவன் நமக்கு **எஜமான்,** நம்மை உண்டாக்கியவர். அவருக்கு முன் **அடிமைகளாகிய** நாம் உட்கார்ந்துகொண்டோ, படுத்துக்கொண்டோ பேச மனம் வருமா?

ஆபிரகாம் **முழங்கால்படியிட்டு இருகைகளையும்** தரையில் **பதியவைத்து** தலையை **தரையோடு** தரையாக **கவிழ்த்து** கர்த்தரிடம் பேசியதை கற்பனை செய்து பாருங்கள்.! என் ஆண்டவனே என்னை ஆளுகை செய்யும் ராஜாவே ! உன் பரிசுத்தம் எங்கே! என் பரிசுத்தம் எங்கே! உம்மிடம் நிமிரந்து பேச நான் தகுதியற்றவன். நான் ஒரு **தூசி,** நான் ஒரு **குப்பை** என்று கூறி என் தலையை தாழ்த்தி ஜெபிக்கிறார். அன்று ஆபிரகாம் உலகத்திலேயே பெரிய பணக்காரன் ஆனால் அவனின் தாழ்மை ஜெபத்தை கவனித்தீர்களா?

நான் **தனிமையில்** இருக்கும்போது பெரும்பாலும் அப்படி ஜெபிப்பது உண்டு. ரயில் பயனத்தில் ரயில் ஓடிக்கொண்டிருக்கும்போது கதவை திறந்துகொண்டு **கண்களை திறந்தபடிதான்** ஜெபிப்பேன். இரவு ரயில் படுக்கையில் (Sleeper) முழங்கால்இடமுடியாது. **படுத்துக்கொண்டே** கைகளை என் நெஞ்சத்துக்கு நேராக வைத்து கைகளை கூப்பி கண்களை மூடி ஜெபிப்பேன். ரயிலில் பகலில் அதிகாலையில் டீ விற்கிறவர்கள சத்தமும் அருகே உள்ளவர்களின் பேச்சு சத்தத்திலும் ஜெபிக்க முடியாது. ரயில் டாய்லட்டில் (கக்கூஸ்) கதவை அடைத்து நின்றுகொண்டு கைகளை கூப்பி ஜெபிப்பேன். அதுதான் என் ரயில் பயன நேரங்களில் காலை ஜெபம ஆகும். கர்த்தர் அதையும் கேட்டாரே. அந்தந்த சூழ்நிலையில்

எப்படியெல்லாம் நம் தெய்வத்துடன் ஜெபித்தாலும் நம் கர்த்தர் நம்மையும் நம் சூழ்நிலையையும் அறிவார். நிச்சயம் நம் ஜெபத்தை கவனிப்பார், கேட்பார். பழைய ஏற்பாட்டில் கர்த்தர் பரலோகத்தில் இருக்கிறவராக அறியப்பட்டார். ஆகவே தலைகளை **வானத்துக்கு நேராக** உயர்த்தி ஜெபிப்பது அன்றைய வழக்கமாக இருந்தது. ஆனால் இயேசு கிறிஸ்துவின் புண்ணியத்தால் அவர் சிலுவையில் அறையப்பட்டு மரித்து உயரித்தெழுந்தபின் அவர் **நம்மோடும் நமக்குள்ளும்** இருக்கிற **இம்மானுவேலாக** (ஏசா. 7:14, யோவா 14:24, எபே 4:30) வாழ்கிறார். ஆகவே வானத்தை அன்னாந்து பார்க்க வேண்டாம். இருக்கிற இடத்தில் கைகூப்பி தலைகளை கவிழ்த்து ஜெபிக்கலாமே!. அதில் பிழை ஏதும் இல்லையே !

கேரளாவில் மட்டும் சபை மக்கள் ஆயர்கள் யாவரும் தலை வணங்கி உடல் வளைத்து உட்கார்ந்த படியே ஜெபிப்பார்கள். ஆனால் **பிஷப்மார்கள்** மட்டும் **தலை குனிய மாட்டார்கள். யாக்கோபையா** என்ற சபைகள், **மார்தோமா** சபை CSIயில் ஒரு சில பிஷப்மார் மட்டும் குறிப்பாக தாடி வளர்த்த பிஷப்மார் (ஒரு சிலரை தவிர) அவர்கள் ஜெபத்தில் **தலைகுனிய** மாட்டார்கள். கேரளாவில் பிஷப்மார்களின் வீடு, அரண்மனை என்றுதான் அழைப்பார்கள். இப்படி ஜெபிப்பவர்களின் ஆவிக்குரிய நிலைப்பாடு எப்படியுள்ளதோ, அப்படித்தான் அவர்கள் ஜெபிக்கும் முறையும் இருக்கும்.

## ஜெப கோபுரங்கள்

**கேள்வி :- ஜெப நடை, ஜெப கோபுரங்கள்** போன்ற கிறிஸ்துவ புது கலாச்சாரம் தமிழ்நாட்டில் எப்படி வந்தது ? (இந்த கேள்வி கேட்டவர் சில பேப்பர் கட்டிங்குகளை எனக்கு அனுப்பியிருக்கிறார்)




**பதில் :- ஜெபக்கோபுரம்** இந்த படத்தில் நீங்கள் காண்பது **இந்திய பாராளுமன்ற கட்டிடம்.** அந்த **கட்டிடத்துக்கு நேராக கைகளை காட்டி** இரண்டுபேர் நிற்கிறார்கள். இதை பத்திரிகையில் வெளியிடுவதற்காகவே நிற்க வைத்து எடுத்த **போட்டோ செட்டப்** என்கிறார்கள். உண்மை எப்படியோ நமக்கு தெரியாது.

இது வெளியிடப்பட்ட பத்திரிகை பெயர் **இயேசு அழைக்கிறார்** 2017 ஜுன் மாதம் 26ம் பக்கம்

ஜெப கோபுரத்தில் **தேசத்திற்காக 24 மணி நேர பிரார்த்தனை**

**தீர்க்க தரிசனம்** நிறைவேறுதல் அறிக்கை மே 2017 டாக்டர் **பால் தினகரன்** அவர்களுடன் அவருடைய தெய்வமான **அருள்நாதர்** வெளிப்படுத்தின தீர்க்க தரிசனம் நிறைவேறிவிட்டது என்று எழுதியுள்ளார்கள். **என்ன தீர்க்கதரிசனம்.** இந்திய தேசத்தின் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் இந்தியாவைப்பற்றி ( தங்கள் மந்திரி பதவிகளைப்பற்றி) தேவனுடைய சித்தம் என்ன? (யார் பதவிக்கு வருவார்கள்) என்பதைப்பற்றி கேட்கவும் அறிந்துகொள்ளவும் இந்த ஜெப கோபுரத்துக்கு இந்தியாவை ஆளும் பிரதமர் மந்திரிகள் பாராளுமன்ற உறுப்பினர் யாவரும் இந்த ஜெப கோபுரத்துக்கு படியேறி வருகைதருவார்கள் என்று தம்பி பால் தினகரனுக்கு மட்டும் அருள்நாதர்

வெளிப்படுத்தினாராம். அது கடந்த 2017 மே மாதத்திக்குமுன் **நிறைவேறிவிட்டது** என்ற அர்த்தம் கொள்ளும் வகையில் என்று ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

வாசகர்கள் டெல்லியில் யாரிடமாவது கேட்டுப்பாருங்கள் அந்த ஜெப கோபுரத்துக்கு இந்தியாவை பற்றி கர்த்தராகிய **இயேசுகிறிஸ்துவின்** சித்தம் என்ன என்று கேட்க இதுவரை எந்த மந்திரியாவது வந்துள்ளார்களா? அப்படி மந்திரிகள் வந்து பதவியைப்பற்றி தேவ சித்தம் என்ன என்று யாராவது கேட்டார்களா? அப்படி கேட்டதாகவே வைத்துக்கொள்வோம், அதற்கு யார் பதில் சொல்வார்?

இது நூற்றுக்கு நூறு பொய் தீர்க்கதரிசனம் அல்லவா.

இந்திய தேர்தலில் ஜெயித்து **பிரதமராக, மந்திரியாக, ஜனாதிபதியாக, உப ஜனாதியாக** பதவி ஏற்றுள்ளவர்கள் யார? **இந்துத்துவா** கொள்ளையுள்ளவர்களும் RSS இந்துமத **தீவிரவாத** இயக்கங்களில் தீவிர அங்கத்தினர்களும், இந்தியாவில் **ஒரே மதம், ஒரே தெய்வம், ஒரே மொழி** (சம்ஸ்கிரதம். இந்தி) என்ற கொள்கை உள்ளவர்கள் தானே. **கிறிஸ்தவ ஆலயங்களை கடந்த சில மாதங்களாக அடித்து நொருக்கினார்கள் பாஸ்டர்களை அவர்களின் மனைவிமாரை நிர்வாணமாக்கியவர்களுமானவர்கள்** ஆளும் கட்சியை சேர்ந்தவர்கள்தானே. டெல்லியில் பாராளுமன்றத்துக்கு அருகில் பல கோடிகள் விலை கூடிய பகுதியில் சில அறைகளை பல கோடிகள் செலவழித்து விலைக்கு வாங்கி அதை **ஜெபகோபுரம்** என்ற பெயர் சூட்டி ஜெப கோபுரங்களிலிருந்து கைகளை **பார்லிமெண்டுக்கு** நேராக நீட்டி ஜெபித்த தீர்க்கதரிசனத்தின் பலன்களை இப்போது உணருகிறீர்களா ?

இதையா நம் தேவன் விரும்புவார்.

❒ **பால் தினகரன் தீர்க்கதரிசனமாக கூறியது என்ன** என்று பழைய ஜனவரி மாதம், பெப்ரவரி மாதம் இயேசு அழைக்கிறார் பத்திரிகையை புரட்டி பாருங்கள். இவர் கூறின ஒன்றாவது நிறைவேறியிருக்கிறதா? இங்கு இவர்கள் ஜெபித்தது என்ன என்றும் இவர்கள் எழுதியுள்ளார்கள்.

### 1) மக்களை வாட்டும் பிரச்சனைகளை தீர்க்கும்படி ஜெப கோபுரத்தில் ஜெபம் செய்தார்களாம்

ஜெபத்துக்கு பதில் என்ன ? எங்கு பார்த்தாலும் தண்ணீர் பஞ்சம். விலை வாசி உயர்வு 2000 ரூபாய் புதிய நோட்டுகளை கையில் வைத்துக்கொண்டு ஒரு தேனீர் (டீ) கூட வாங்கி குடிக்கமுடியாத கதி அனுபவித்ததை ஞாபகப்படுத்திக்கொள்வோம்.

## அந்த தீர்க்கதரிசனம்

### 2) ஊழியத்துக்கு வாசல்கள் திறக்கப்படும்

இப்போது சொல்லுங்கள் இவர் கூறியபடி ஊழியத்துக்கு வாசல்கள் திறக்கப்பட்டதா? மூடப்பட்டதா? மிஷனரிகள் **துரத்தியடிக்கட்டார்களா? நிர்வாணமாக்கட்டார்களா? பால் தினகரனின்** தீர்க்கதரிசனம் எவ்வளவு **அடையாளத்தோடு** நிறைவேறியுள்ளதை பார்த்தீர்களா?

ஜெபகோபுர **ஜெபவீரர்கள்** ஜெபிக்கும்போது ஆவியானவர் அனேக காரியங்களை அவர்களுக்கும் வெளிப்படுத்தியுள்ளார என்றார்கள். அப்படி வெளிப்பட்ட தீர்க்கதரிசனம் இதுதானா?

கடைசியாக பால் தினகரன் எழுதும்போது ஜெப கோபுரத்தில் ஜெபிக்கப்பட்ட ஜெபத்துக்கு வெளிபடுத்திய தீர்க்கதரிசன வல்லமையும், விளைவையும் காணும்போது ஆச்சரியமாக இருக்கிறது. என்கிறார்

ஜெப கோபுரத்தில் ஜெபித்த 3 ஜெப வீரர்கள் மூலம் வெளிப்படுத்தின தீர்க்கதரிசனம் என்று பழியை, பாவம் **அந்த ஜெப வீரர்கள்** என்று அழைக்கப்படுபவர்கள் மீது போடுகிறார். **(கள்ள தீர்க்கதரிசனம்) காலியான நீதிபதி பணியிடங்கள் நிரப்பப்படும்.**

இது 9-6-2016 அன்று கூறப்பட்ட தீர்க்க தரிசனம்

**பதில் :-** காலியான நீதிபதி பணியிடங்கள் நிறப்ப 3-4-2016 அன்றே நீதிபதிகள் பெயர்கள் பரிசீலனைக்கு (Investigation) அனுப்பப்பட்டது. அதன்படி **நீதிபதிகளை** நியமிக்க ஜனாதிபதி அவர்கள் ஆர்டரும் அனுப்பி விட்டார் என்று பத்திரிகை செய்தி கூறுகிறது.

இவர்கள் குறிப்பிட்ட அதே Hindustan Time, Times of India விலும் இவர்கள் தீர்க்கதரிசனம் உனரப்படுவதற்கு முன்பே நியமன செய்தி வெளியிடப்பட்டுவிட்டதே.

▣ அதேபோல் **காலியாக உள்ள அரசு அதிகாரிகள் பணியிடம் சீக்கிரம் நிறப்பவேண்டும்** என்று கோர்ட் கண்டிப்பான கட்டளையிட்டதற்குபின் பணியிடங்கள் நிறப்ப அரசாங்கம் ஏற்பாடு செய்தது.

இங்கு தீர்க்கதரிசனம் செயல்பட்டது எப்போது? இவர்கள் தெய்வமான அருள்நாதருக்கு **லேட்டாகத்தான்** எல்லா வெளிப்பாடுகளும் வரும்போலும்.

கடைசி காலத்தில் **கள்ள தீர்க்கதரிசிகள்** மக்களை வஞ்ஜிக்கப்படதக்கதாக எழும்புவார்கள் என்று மத் 24, மாற் 13, லூா. 21 சுவிசேஷங்களில் இயேசு முன்னெச்சரிக்கையாக அறிவித்துவிட்டாரே !

இந்த பொய் தீர்க்கதரிசனங்களை அறிந்தும் இப்போதுள்ள ஜெப கோபுரம் கட்டப்பட்ட இடங்கள், சொத்துக்கள் யாவும் தன் பிள்ளைகளுக்கு இப்போதே ரெடி செய்துவிட்டார். உலகில் பெரிய பணக்காரர் பில்கேட் அல்ல இவர்தான். No.1 கோடீஸ்வரர்கள் இவ்வளவு விஷயங்கள் அறிந்தும் இன்னும் **ஜெப கோபுரத்துக்கு** ஒரு **செங்கலுக்கு** 300 என்றும் 1000 என்றும் அனுப்பி கொண்டிருக்கும் மக்களை என்ன என்று அழைப்பது?

## கவர்ச்சி விளம்பரம்:

நீங்கள் ஜெப கோபுரத்துக்கு நன்கொடை வழங்கினால் அங்குள்ள **பலகைகளில்** உங்கள் பெயர், தொகை எழுதிவைக்கப்படும்.

தியான ஜெப மண்டபத்துக்கு காணிக்கை அனுப்புபவர்களின் பெயர்கள் நடக்கும் இரு **பாதைகளின் இருபக்கங்களிலும்** உள்ள **மரங்களில்** பலகையில் **எழுதி தொங்கவிடப்படும்.** நீங்கள் நடக்கும்போது இரண்டு பக்கமும் உங்கள் பெயரை பார்த்து பார்த்து நீங்கள் பூரிக்கலாம். ஆனால் **பரலோகத்துக்கு உங்கள் பெயர் வருமா ?**

பரலோகத்தின் ஜீவ புஸ்தகத்தில் இவர்கள் **யாருடைய பெயரும் எழுதப்பட்டிருக்காது.** அந்த **மரத்தில் தொங்கும்** மர பலகைகளில் மட்டுமே பெயர் காணப்படும்.

பல வருடங்களாக **நானும்** இன்னும் **பல ஊழியர்களும் வெளிப்படையாகவே** இவர்கள் **கள்ள தீர்க்கதரிசனத்தைபற்றி** எழுதிவிட்டார்கள். நானும் பல முறை எழுதி

அறிவித்துவிட்டேன். ஆனால் இப்படிப்பட்ட கள்ள தீர்க்கதரிசனத்தை நம்பும் **பிஷப்மார்** உண்டு, **ஆயர்கள் உண்டு, பாஸ்டர்கள் உண்டு. விசுவாசிகள்** என்று அழைக்கப்படும் **பெரும் வியாபாரிகள்** உண்டு. இவர்களின் முடிவு. பரிதாபம் !

**செய்யதக்கவர்களுக்கு செய்யுங்கள்** நீதி 23:3

ஒரு இடத்தில் அமர்ந்து நாட்டுக்காக பார்லிமெனட்டுக்காக **பிரதமருக்காக** ஜெபித்தால் கர்த்தர் அந்த ஜெபத்தை கேட்க மாட்டார். டெல்லிக்கு டூர் பயணம் என்று ஏற்பாடு செய்துவிட்டு தாஜ்மஹாலை கண்டு அதன்பிறகு கடைசியாக ஒரு 5 நிமிடம் **பாராளுமன்றத்தை** நோக்கி மந்திரவாதிகளைப்போல் **கைகளை நீட்டி** ஜெபிக்க ஆசைப்படுபவர்கள்தான் பொரும்பாலும் அந்த ஜெபகோபுரத்துக்கு போய் வருகிறார்கள்.

**ஜெபகோபுரங்கள்** என்ற பெயரில் பல நாடுகளிலும்,இந்தியாவிலும் பல கோடிகள், **பல பில்லியன்கள்** ரூபாய் கொடுத்து ஏராளமான நிலங்கள் வாங்கி கட்டிடங்களை கட்டி தன் குடும்பத்துக்கு தன் சந்ததிகளுக்கு சொத்துக்கள் சேர்த்தது மிக தந்திரமான ஏற்பாடுகள் என்று மக்கள் கூறுவதை நம்பவேண்டியுள்ளது.

## திருநெல்வேலி CSI டையோசிஸ் பிரச்சனைகள்:

நெல்லை திருமண்டலத்தில் நடக்கும் தொடர் பிரச்சனைகளினால் நெல்லை சிஎஸ்ஐ சபை மக்கள் மிகவும் சோர்ந்து இருப்பதை அவர்கள் எழுதிய கடிதங்கள்,அனுப்பிய புகைப்படங்களை பார்த்து நெல்லை சிஎஸ்ஐ சபை மக்கள் எவ்வளவாய் சோர்ந்துள்ளார்கள் என்பதை உணர முடிந்தது. பிஷப் **Rt.Rev.J.J.கிறிஸ்துதாஸ்** அவர்கள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இப்போது உள்ள புதிய கமிட்டி,நிர்வாகத்தை தன் பொருப்பில் எடுத்துள்ளது. பிஷப் ஸ்தானத்தில் உபதலைவர் அவர்கள் நெல்லை திருமண்டல நிர்வாகத்தை நடத்துகிறார்.

இதன் மத்தியில் புதிய நிர்வாகத்தினால் இடம்மாற்றம் செய்யப்பட்ட ஆயர்களை ஆராதனை நடத்தவிடாமல் பிஷப்பினால் நியமிக்கப்பட்ட ஆயருடன் கைகலப்பு ஏற்பட்டது. அதை சபை மக்கள் தங்கள் மொபைல் மற்றும் வலைதளங்களில் வெளியிட்டது நெல்லை சிஎஸ்ஐ சபை மக்களை தலைக்குனிய வைத்தது. **பணியிட நீக்கம்** செய்யப்பட்ட பிஷப் அவர்கள் மறுபடியும் நீதிமன்றம் செல்ல பணபலமற்று இருக்கிறார். முன்பு டையோசிஸ் பணத்தை நீதிமன்ற செலவுக்கு எடுத்ததுபோல் இப்போது செலவலிக்கமுடியாமல் போயிற்று. பண உதவி செய்யும் செல்வந்தர்களும் பிஷப்க்கு முன்புபோல பணம் செலவழிக்க முயலவில்லை. காரணம் பிஷப் அவர்கள் சில மாதங்களுக்குள் ஓய்வுபெறஇருக்கிறார். இந்த நிலையில் அவருக்கு பணம் செலவழிப்பது பிரயோனம் இல்லை என்று தீர்மானித்திருக்கலாம்.

ஒரு பிஷப் பதவியில் இல்லாவிட்டால் எப்படியிருக்கும் என்பதை பிஷப் அவர்கள் இப்போது உணர ஆரம்பித்துவிட்டார் என்று நினைக்கிறேன். தூத்துக்குடி பழைய பிஷப்பைப்போல இவரும் எல்லாராலும் ஒதுக்கப்பட்டால் அடக்க ஆராதனைக்குகூட இவரை உபயோகிக்கமாட்டார்கள். ஒரு பிஷப் பதவியில் இருக்கும்போது இரண்டுவித கோஷ்டிகளிடம் ஞானத்தோடு நடந்து தவறான செயல்களுக்கு துணைப்போகாதபடி **பழிவாங்குதால் இல்லாமல்,பட்சபாதம் இல்லாமல்** நிர்வாகத்தை நடத்திசொன்றால் ஓய்வுபெற்றபிறகும் மதிப்பும், மரியாதையும் கிடைக்கும். இப்போதுள்ள பிஷப்மார்களுக்கு இது ஒரு பாடமாக அமையும் என்று நினைக்கிறேன்.

இந்த பிரச்சனையினால் பாதிக்கப்படுபவர்கள் **ஆயர்களும், ஆசிரியர்களும்** ஆவார்கள். நெல்லை திருமண்டலத்திற்காக ஜெபம் ஏறெடுப்போம்.

## முக்கிய அறிவிப்பு

கீழே குறிப்பிடும் மூன்று வங்கிகளின் மூலமாக வாசகர்களின் பணபரிவர்த்தனைகள் அதிகம் இல்லாததால் மூன்று வங்கி கணக்கை (Closs செய்திவிட்டோம் என்பதை அறிவிக்கிறேன்.

1) Syndicate Bank
2) State Bank of Travangore
3) IOB - Indian Overseas Bank

*ஆகவே வாசகர்கள் இந்த வங்கி மூலமாக எந்த காணிக்கையும் அனுப்ப வேண்டாம் என்றும் அறிவிக்கிறேன்.*

*கீழே உள்ள இரண்டு வங்கிகள் வழியாக ஆன்-லைன் மூலமாகவோ, காசோலை மூலமாகவோ காணிக்கைகளை அனுப்பலாம் என்று அறிவித்துக்கொள்கிறேன்.*

காணிக்கை அனுப்பப் தொடர்புக்கொள்ளவேண்டிய வங்கிகள் விவரம் :

பெயர் : **Dr. M.G.E. PUSHPARAJ**

1) வங்கி பெயர் : **SBI State Bank of India** Srirangapalayam Branch - SALEM -1970

**A/c No. 10764116842**

*வெளிநாட்டில் உள்ளவர்கள் காணிக்கை அனுப்ப :*

**SWIFT CODE : SBININBB637 - 10764116842**

*இந்தியாவில் உள்ளவர்கள் காணிக்கை அனுப்ப :*

**IFSC CODE : SBIN0001970-10764116842**

2) வங்கி பெயர் : **CANARA BANK,** Suramangalam Branch - 1219

**A/c No. 1219101013622**

*வெளிநாட்டில் உள்ளவர்கள் காணிக்கை அனுப்ப :*

**SWIFT CODE : CNRBINBBSLM - 1219101013622**

*இந்தியாவில் உள்ளவர்கள் காணிக்கை அனுப்ப :*

**IFSC CODE : CNRB0001219 - 1219101013622**

## காணிக்கை

Online வழியாக மேலே கூறிய இரண்டு வங்கிகளுக்கு காணிக்கை அனுப்பியவர்கள் email அல்லது கடிதம் அல்லது தொலைபேசி வழியாக பணம் அனுப்பிய விவரங்களை அறிவிக்க கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் பணம் அனுப்பியது யார் என்ற விவரம் அறிய இயலும். அனுப்பியவர் பெயர், விலாசம், தொலைபேசி எண்., அனுப்பிய தொகை எவ்வளவு, எந்த தேதியில் - மாதத்தில் அனுப்பினீர்கள் என்பதை மட்டும் தெரிவித்தால் காணிக்கை கிடைத்த விவரத்தை உங்களுக்கு கடிதம் மூலமாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ அறிவிக்க உதவியாக இருக்கும்.

மேலும் குறிப்பாக அனுப்பியவர்களின் குடும்பத்துக்காக ஜெபிக்கமுடியும். இந்த விஷயத்தில் ஒத்துழைப்பு தாருங்கள்.

சிலர் பணம் அனுப்பிய விவரம் தெரிவிக்காமல் போனால் அந்த தொகையை வங்கி பாஸ்புக்கில் பார்த்தவுடன் அந்த தொகைகை குறிப்பிட்டு உடனே ஜெபித்துவிடுகிறோம். சகலத்தையும் அறியும் தெய்வம் பணம் அனுப்பியவரையும் அறிவார். நிச்சயம் கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

# கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்



செல்வி **ஹெலன்ராணி**

இந்தியாவில் **திருநெல்வேலி** மாவட்டம் **டோனாவூர்** என்ற கிராமத்தில் திரு. D.M. ஜயாதுரை என்பவரின் **இரண்டு** பெண் பிள்ளைகளில் மூத்தவர் செல்வி **ஹெலன்ராணி** (Senior Health Nurseஆக அரசாங்க பணியிலிருந்து ஓய்வு பெற்று 2017 மார்ச் 20ம் தேதி தனது 75வது வயதில் கர்த்தரிடம் தன் ஆவியை ஒப்புவித்தார்.

தகப்பனார் இறந்துபோனார். தங்கை **லிசி** அவர்கள் மட்டும் அக்காவின் மரணம் வரை மிகவும் உதவியாக இருந்தார். இப்போது **செல்வி லிசி** அவர்களும் வயது முதிர்ந்த நிலையில் தனிமையாக உள்ளார். இவர்கள் இருவரையும் இவர்களின் சிறு வயது முதல் நான் அறிவேன். என் கூட்டங்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் எங்கு நடந்தாலும் ஒரு சில ஆத்துமாக்களை கூட அழைத்துவந்து பிரசங்கம் மூலமாக அவர்களின் இரட்சிப்புக்கு உதவினார். நல்ல ஆத்தும பாரம் உள்ள இரண்டு சகோதரிகளும் FMPBயின் ஆரம்ப காலம் தொடங்கிய மிஷனரி பணிக்காக காணிக்கை சேகரித்து அனுப்பிக்கொண்டே இருப்பார். ஜெப குழுக்கள் மூலமாக மிஷனரி பணிக்காக ஜெப கூட்டங்கள் நடத்துவார். தங்கள் வாழ்க்கையை இரண்டு சகோதரிகளும் FMPB மிஷனரி பனிக்காக அர்பணித்து கொண்டார்கள்.

அக்காள் **ஹெலன்ராணி** மரித்தபின் தங்கை **லிசி** FMPB பொருப்பாளர்களை தன் வீட்டுக்கு அழைத்து தன் தகப்பன் இரண்டு பெண் பிள்ளைகளின் திருமணத்துக்காக தன் வீட்டை சுற்றிலும் சில வீடுகளை வாங்கி தன் வாழை மரங்கள் விளையும் நிலங்களையும் சேர்த்து வைத்திருந்தார்.

**சகோதரி லிசி** அவர்கள்தான் மரிப்பதற்குமுன் நல்தொரு ஏற்பாட்டை செய்ய திட்டமிட்டார். **டோனாவூர் மெட்ரிகுலேஷன் பள்ளியில்தான்** FMPB போன்ற பல மிஷனரி ஸ்தாபனங்களில் மிஷனரிகளாக பணிபுரியும் மிஷனரிகளின் பிள்ளைகள் படிக்கிறார்கள். அந்த மிஷனரிகள் இந்தியாவின் பல பாகங்களிலிருந்து பயணம் செய்துதான் பெற்ற பிள்ளைகளை வருடத்துக்கு ஒருமுறை அல்லது சிலமுறை பார்க்க வந்தால் தங்குவதற்கு **டோனாவூரில் லாட்ஜ்** விடுதிகள் ஒன்றும் இல்லை. திருநெல்வேலியில் ஓட்டலில் தங்கி ஒன்றரை மணிநேரம் பிரயாணம் செய்து ஒவ்வொரு நாளும் டோனாவூர் வந்து செல்ல வேண்டிய இருந்தது. அதை மனதில் கொண்ட **சகோதரி லிசி** தகப்பனால் தங்களுக்கு கொடுத்த **வீடுகளை** சீர்செய்து நல்ல வசதியுள்ள காட்டேஜ்களாக மாற்றி, FMPB தங்கள்

பொருப்பில் எடுத்துக்கொள்ள இலவசமாக FMPB வசம் ஒப்புவிக்க ஏற்பாடு செய்துவிட்டார்.

கடந்த ஜூலை மாதம் FMPB பொதுசெயலர்.**Rev. சுதர்சன் தாமஸ்** அவர்களும் மற்றும் FMPB பொருப்பாளர்களை தன்னோடு அழைத்து சென்று சகோதரி.லிசி அவர்களுடன் பேசி அற்புதமான ஏற்பாட்டை லிசி அவர்கள் செய்துமுடித்தார். மிஷனரி பிள்ளைகளை காண பெயரில் அவர்களின் பெற்றோர்கள் வந்தால் அவர்கள் தங்கிச்செல்ல தன் வீடுகளை, தன் சொத்துக்களை FMPBக்கு தானமாக எழுதிகொடுக்க முன்வந்தது புகழப்படதக்கது.

**சகோதரி.லிசியின்** அந்த நல்ல மனசுக்காக அந்த நல்ல ஏற்பாட்டுக்காக அவரை பாராட்டுகிறேன். கர்த்தரை துதிக்கிறேன். சில மாதங்களுக்கு முன்னே லிசி மனதில் போராட்டம் இருந்தது. தன் மரணத்துக்குபின் தன் சொத்துக்களை என்ன செய்யவேண்டும்? என்று குழப்பமாக இருப்பதாக எனக்கு கடிதம் எழுதினார். நல்ல முடிவு நல்ல ஏற்பாடு செய்து முடித்த சகோதரி **லிசியை** பாராட்டுகிறேன். ஆகஸ்ட் மாதம் நானே டோனாவுர் சென்று ஹெலன் மரணம் குறித்து துக்கம் விசாரித்து ஆறுதல்,ஆலோசனை கூறி ஜெபித்து வந்தேன்.

இந்த பெண்கள் இருவரும் தங்களுக்கு திருமணம் நடக்கவில்லையே!, தகப்பனையும் தாயையும் இழந்து இருவரும் தனிமையாக்கப்பட்டோமே என்ற **வெருப்பு** அல்லது **முறுப்பு** இல்லாமல் இயேசுவை தங்கள் **தோல்வியின் மத்தியிலும், தனிமையின்** வேதனையின்றி கர்த்தருக்காக கர்த்தரின் பணிக்காக தங்களை தேற்றிக்கொண்டு தங்களையும் தங்கள் வீட்டையும்,சொத்துக்களையும் தாரைவார்த்து கொடுத்த சாட்சியுள்ள சகோதரிகளை பாராட்டாமல் இருக்கமுடியாது. இப்போது குடும்பத்தில் தனக்கு இருந்த ஒரே துணையாயிருந்த தன் அக்காளை இழந்து தனிமையில் கர்த்தரோடு உறவாடிக்கொண்டிருக்கும் **சகோ லிசி**யை விசுவாசிகள் மறக்காமல் ஜெபத்தில் நினைவு கூறுங்கள். கர்த்தர் தாமே அவருக்கு ஆறுதல் அளிப்பாராக.

# முக்கிய அறிவிப்பு:

டாக்டர். புஷ்பராஜ் (ஜாமக்காரன்) என்ற பெயரில் எனக்கு **வாட்ஸ் ஆப்,பேஸ்புக்** எதுவும் இல்லை. என் பெயரிலோ, ஜாமக்காரன் பெயரிலோ யாரைக்குறித்தாவது எழுதப்பட்டிருந்தால் அல்லது புகைப்படங்கள் வெளியிட்டிருந்தால் அதற்கும் எனக்கும் வாட்ஸ் ஆப்,பேஸ்புக்கில் எந்த சம்பந்தமும் இல்லை என்பதை இதன்மூலம் அறிவிக்கிறேன். அப்படி எதையாவது என் பெயரில் அல்லது ஜாமக்காரன் பெயரில் கண்டால் உடனே எனக்கு அறிவிக்கவேண்டுறேன். **- டாக்டர்.புஷ்பராஜ்**

# Dr. **புஷ்பராஜ்** அவர்கள் பிரசங்கிக்கும் சென்னை கூட்டங்கள்



**சென்னை :**

**தமிழ் சுவிசேஷ லூத்தரன் அன்பு நாதர் ஆலயம்** (TELC)
அண்ணா நகர் கிழக்கு, சென்னை
நாள் : 2017 அக்டோபர் **26, 27, 28** **வியாழன், வெள்ளி, சனி** ஆகிய 3 நாட்கள்
நேரம்: மாலை **6-30** மணி சனிக்கிழமை மட்டும் காலை கூட்டம் உண்டு - சனி இரவு **கடைசி கூட்டம்**
தொடர்புக்கு : **Rev. Dr. F. ALFRED H. CHANDRASEKARAN** Mob.: 9841250070

**பெங்களூர் :**

**திருநெல்வேலி IMS மிஷனரி கூடுகை** (பெங்களூர் கிளை)
நாள் : 29 ஞாயிறு காலை 10-00 மணி முதல் மாலை 4-00 மணி வரை
**இடம் :** St. Johns School, (ஆடிட்டோரியம்) Coxtown, (பெங்களூர்)
தொடர்புக்கு : **Rev. AROKIYASAMY** Mob. : 9379444024, Secretary **Mr. STANLY JOSEPH** Mob.: 9880609690

**SEPTEMBER 2017**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.